வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 21.03.2024 வியாழக்கிழமை | இதழ் : 81 | பக்கங்கள் : 12




## நாளை யாழ். வருகிறார் ரணில்!

### காணி கையளிப்பில் பங்கேற்பார்



யாழ்ப்பாணம், மார்ச் 21

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருக்கிறார்.

யாழ். வரும் அவர், பலாலியில் இராணுவ கட்டுப்பாட்டில் கடந்த 33 வருடங்களாக காணப்பட்ட 278 ஏக்கர் விவசாய காணிகளை உரிமையாளர்களிடம் மீள கையளிக்கவுள்ளார்.

பலாலியில் நடைபெறும் நிகழ்விலேயே

11

## 3,000 ஆண்டு பழமையானது வெடுக்குநாறி ஆலயம் தமிழரின் வழிபடும் உரிமையை பறிக்கவேண்டாம்

### சபையில் கோரினார் சிறிதரன் எம்.பி.



கொழும்பு, மார்ச் 21

வெடுக்குமாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் 3000 ஆண்டு பழமைவாந்தது. அப்பகுதியை சூழத் தமிழர்களான நாகர்களே வாழ்ந்துள்ளதாக வரலாற்று ஆய்வுகள் தெரிவிப்பதாக தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு

11





# அரசுக்கு எதிராக பேரணி; கொழும்பில் 33 பேர் கைது!

- கண்ணீர் குண்டு, நீர் தாரை பிரயோகம்
- கைதானோரில் பெண்களும் அடங்குவர்
- ஐந்து பொலிஸாருக்கு காயம்

கொழும்பு, மார்ச் 21

அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட பேரணியில் 33 பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் 3 பெண்கள், 2 பிக்குகளும் அடங்குவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், இந்த ஆர்ப்பாட்டத்தின்போது 5 பொலிஸார் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் வெளிநாடுகளுக்கு நாட்டின் வளங்களை விற்பனை செய்தல் என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

11

## கடலில் நீராடிய இருவர் அலையில் சிக்கி மரணம்!

### இளவாலையில் நேற்று துயரம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

கடலில் நீராடியபோது அலை இழுத்துச் சென்ற ஒருவரும் அவரைக் காப்பாற்ற முயன்ற மற்றொருவருமாக இருவர் உயிரிழந்தனர்.

நேற்று புதன்கிழமை மாலை இளவாலை - சேந்தாங்குளம் கடலில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், தேவகருணதாஸா ஜூட் (வயது 37), சிவநேசன் திபிசன் ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். இவர்கள் வவுனியாவின் தங்கன்குளம், செட்டிக்குளத்தை சேர்ந்தவர்களாவர்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

11

## கோப் குழுவிலிருந்து 10 எம்.பிக்கள் விலகல்!

கொழும்பு, மார்ச் 21

கோப் என்று அழைக்கப்படும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிலிருந்து நேற்றும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் விலகினர்.

நேற்று முன்தினம் வரை 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் விலகிய நிலையில் கோப் குழுவிலிருந்து விலகிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 10ஆக உயர்ந்தது.

நேற்றைய தினம் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸநாயக்கா, பொதுஜன பெரமுனவின்

11

## மகிழ்ச்சியான நாடுகள்; இலங்கையின் இடம்-128

நியூயோர்க், மார்ச் 21

உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் இலங்கை 128ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த ஆண்டு 127ஆவது இடத்தை இலங்கை பெற்றிருந்த நிலையில் ஓரிடம் பின்தங்கியுள்ளது.

இதேநேரம், மகிழ்ச்சியான நாடுகளின் பட் டியலில் 7ஆவது முறையாக பின்லாந்து முதல் இடத்தைப் பிடித்துள்ளது. அத்துடன்,

11

## நாணயங்களை சேதமாக்கினால் 3ஆண்டுகள் சிறை!

கொழும்பு, மார்ச் 21

நாணயத் தாளை வேண்டுமென்றே உருச் சிதைத்தால் அல்லது சேதமாக்கி யமை உறுதிப்படுத்தப்பட்டால் 2 கோடியே 50 இலட்சம் அபராதம் அல்லது 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

நாணயத்தாள்களை சேதப்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும் என்று எச்சரித்துள்ள மத்திய வங்கி, ஆபரணங்கள்

11

## பிரிட்டனில் புகலிடம் கோருவோரை தளங்களில் தங்க வைக்கத் திட்டம்!

லண்டன், மார்ச் 21

பிரித்தானியாவில் புகலிடம் கோருவோரை - சட்டவிரோத குடியேற்றவாசிகளை இராணுவ தளங்கள் போன்ற தளங்களில் தங்கவைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் மூலம் பெரும் செலவைக் கட்டுப்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படு கின்றது. பாராளுமன்ற செலவுகளை கண்காணிக்கும் அமைப்பு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியேற்றவாசிகள், பிரித்தானியாவின் தெற்கு கடல் பகுதியூடாக நுழைந்துள்ளனர். இந்த நிலையில் அவர்களை விடுதிகளில் தங்க வைப்பதால் பெரும் நிதி செலவிடப் படுகின்றது என்று

11

## இளம் குடும்பஸ்தர் கொலை; 5ஆவது நபரும் அடையாளம்!

யாழ்ப்பாணம், மார்ச் 21

இளம் குடும்பஸ்தர் கடத்தப்பட்டு, வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்தாவது சந்தேகநபரும் அடையாளம் காட்டப்பட்டார்.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று புதன் கிழமை நடந்த அடையாள அணிவகுப்பில்,

11

## தேர்தலில் போட்டியிடும் எண்ணம் எனக்கில்லை!

### கூறுகிறார் பஸில் ராஜபக்ஷ

கொழும்பு, மார்ச் 21

தேர்தலில் போட்டியிடும் எண்ணம் தமக்கு இல்லை என பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகரும் முன்னாள் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

நேரடி அரசியலில் பங்குபற்றும் நோக்கம் இல்லை எனவும் கட்சி மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் விரும்பும் பட்சத்தில் பொறுப்பை ஏற்றுக்கொள்ள

11

# இப்படியும் நடக்கிறது

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய பாராளுமன்றக் குழுவிலிருந்து (கோப்) எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த ஏழு பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகினர் என்ற செய்தி நேற்றைய பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வெளிவந்திருந்தது.

கோப் குழுவின் புதிய தலைவராக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபே குணவர்த்தன நியமிக்கப்பட்டமையே இந்தப் பதவி விலகலுக்குக் காரணம் என்பதும் தெரிந்ததுதான்.

நீண்டகாலமாக பொதுஜன பெரமுன கட்சி, தனது மூத்த தலைவர்கள் சிலருக்கு அமைச்சு பதவி வழங்குமாறு ஜனாதிபதிக்கு “குடைச்சல்“ கொடுத்து வருகின்றது. அவர்களில் முக்கியமானவர்களில் இந்த ரோஹித அபே குணவர்த்தனவும் ஒருவர். அவரின் களுத்துறை மாவட்டத்தை சேர்ந்தவரான ஐக்கிய மக்கள் சக்தியின் ராஜித சேனரத்ன எம். பி. ஏற்கனவே ரணில் அணிக்கு வருவதற்கு தயாராக இருந்த போதிலும் அவருக்கு அமைச்சு பதவி கொடுத்தால் தமது கட்சியின் களுத்துறை மாவட்டத் தலைவரான ரோஹிதவுக்கும் அமைச்சர் பதவி கொடுக்கவேண்டும் என்று பெரமுன வலியுறுத்தியது. இதனால் ராஜிதவை தன்னோடு சேர்த்துக் கொள்வதையே தவிர்க்க வேண்டிய நிலை ரணிலுக்கு ஏற்பட்டது. அதாவது, ராஜிதவை இழந்தாலும் பரவாயில்லை ரோஹிதவுக்கு அமைச்சு பதவி கொடுப்பதில்லை என்பதில் ரணில் விடாப்பிடியாக இருக்கிறார்.

இவருக்கு பதவி கொடுப்பதை ஜனாதிபதி ரணில் தொடர்ந்து நிராகரித்து வரும் அதேவேளையில், அவர்கள் கொடுத்த அழுத்தம் காரணமாகவே அவரை கோப் குழுவின் தலைவராக நியமிக்க வேண்டியேற்பட்டது.

ஆனால், இப்படி நடக்கும் என்பதைத் தெரிந்து கொண்டே ரணில் காய் நகர்த்தியிருக்கிறார் என்கிறார்கள் ரணிலை அறிந்தவர்கள். இதற்கு முன்னரும் மத்திய வங்கி ஆளுநர் நியமனம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் எப்படி நடந்து கொண்டார் என்பதையும் மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை அனுமதித்துவிட்டு ஆளுநருக்கு எதிராக அதனையே பயன்படுத்தி வருவது பற்றியும் இந்தப் பத்தியில் எழுதியிருந்தது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

இன்று சம்பள அதிகரிப்புத் தொடர்பாக மத்திய வங்கிக்கு எழும் கண்டனங்களை அடுத்து ஆளுநரே பதவி விலகினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

அதே பாணியிலேயே இப்போது கோப் குழுவின் நியமனமும் நடந்து முடிந்திருக்கின்றது. கோப் குழுவுக்கு பாராளுமன்ற சம்பிரதாயங்களின்படி எதிர்க்கட்சியை சேர்ந்த ஒருவரே நியமிக்கப்படுவது வழக்கமானது. ஆனால், அந்த சம்பிரதாயங்களை மீறி ரோஹிதவை நியமித்து அவரையும் அவர் கட்சியையும் “மகிழ்ச்சி”ப் படுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது அவராகவே பதவி விலகும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறார். இனி என்ன கொஞ்சக் காலத்துக்குத் தமக்கு பதவி கேட்டு ரோஹித அழுத்தம் கொடுக்கப் போவதில்லை.

இந்த நியமனம் குறித்து, ஒரு தெற்கு அரசியல் பிரமுகருடன் கதைத்துக் கொண்டிருந்தபோது அவர் சொன்னார், “நீங்கள் நினைப்பதுபோலவும் இருக்கலாம். ஆனால், ஜனாதிபதி ரணில் அவர்களை இப்போது எதிரணியாக பார்ப்பதாகவும் அர்த்தம் கொள்ளலாம் அல்லவா?” என்று கேட்டார்.

அவர் கேட்டதிலும் அர்த்தம் இருப்பதாகவே அண்மைக்கால சம்பவங்களை பார்க்கின்றபோது தெரிகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் அல்லது ஆக்கக்கூடியது மே தினத்தன்று நடக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக்கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த பலரும் தம்மோடு இணைவார்கள் என்று ஐ. தே. க. வட்டாரங்களில் தொடர்ந்து சொல்லப்பட்டு வருகின்றது.

பொதுஜன பெரமுனவிலிருந்து ஏராளமானவர்கள் ஏற்கனவே அரசுக்கு அதாவது, ரணிலுக்கு ஆதரவளித்து வரும் நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்தும் பலர் வெளியேற - நாமல் தலைமையிலான பொதுஜன பெரமுன எதிர்க் கட்சியில் சென்று அமர்ந்தால் அவர்களே எதிரணியில் பலம் பொருந்தியவர்களாக இருப்பார்கள். நாமலின் விருப்பப்படி அவர் எதிர்க் கட்சி தலைவரானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றார் அந்த தெற்கின் அரசியல் பிரமுகர்.

**- ஊர்க்குருவி.**

# 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வருவதே இலக்கு

## அமைச்சர் டயானா கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 21

இந்த வருடத்தில் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான இலக்கை அடைய பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார்.

இந்த வருட காலப்பகுதியில் 5 லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் சுற்றுலாப் பயணிகளுக்காக வழங்கப்படும் வசதிகளை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் டயானா கமகே குறிப்பிட்டார்.

சுற்றுலா தொழிலில் சின்ன சின்ன பிரச்னைகள் உள்ளதை பார்த்தோம். அவற்றைத் தீர்க்க தீர்வுகளைத் தேடுகிறோம் என அவர் கூறினார். (அ)

## கொலைக் குற்றச்சாட்டு:

# கெஹலியவை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு உத்தரவு

கொழும்பு, மார்ச் 21

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை கண்டி மேல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கண்டி மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 1999ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலின் பிரசார நடவடிக்கைகளின்போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு ஒருவரைக் கொலை செய்தமை மற்றும் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்ட ஏழு பேருக்கு காயம் விளைவித்தமை தொடர்பில் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான வழக்கொன்று கண்டி மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது கெஹலிய ரம்புக்வெல நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கவில்லை.

அதற்குப் பதிலாக அவரது வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தனர்.

தங்களது கட்சிக்காரர் மாளிகாகந்தை நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாகவும், வழக்கு விசாரணைகளுக்கு ஆஜராக அவர் விருப்பத்துடன் இருப்பதாகவும் கெஹலியவின் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்தனர்.

இதனையடுத்து எதிர்வரும் ஜூலை 26ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்த நீதிபதி தர்சிகா விமலரத்ன, அன்றைய தினம் கெஹலியவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மகசின் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (அ)

# ரயில் சேவையில் தாமதம்

கொழும்பு, மார்ச் 21

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகில் ரயில் தடம் புரண்டதன் காரணமாக கரையோரப் பாதையில் பயணிக்கும் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

கொழும்பு கோட்டையில் இருந்து தெற்கு களுத்துறை நோக்கி நேற்று முன் தினம் இரவு 7.15 மணி அளவில் பயணித்த அதிவேக ரயில் கோட்டை மற்றும் கொம் பனித்தெரு ரயில் நிலையங் களுக்கு இடையில் தடம் புரண் டதாக, ரயில் திணைக்களம் தெரிவித்தது.

இதனால் ரயில் தண்டவாளத்தை அகற்றும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் ரயில்வே திணைக்கள பிரதிப் பொது முகாமையாளர் என்.ஜே. இந்திபோலகே குறிப்பிட்டார்.

ரயில் தடம் புரண்டதன் காரணமாக காலி அஞ்சல் ரயில் உட்பட 4 ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. (அ)

# கட்டுநாயக்கவிலிருந்து புறப்பட்ட விமானம் மீண்டும் தரையிறக்கம்!

கொழும்பு, மார்ச் 21

இந்தியாவின் பெங்களூரார் நோக்கி நேற்று முன் தினம் அதிகாலை பயணித்த சிறிலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானம் ஒன்று தொழில்நுட்பகோளாறு காரணமாக மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கன் விமான சேவையின் யு.எல். 173 என்ற விமானம் நேற்று முன் தினம் அதிகாலை 1.10 அளவில் பயணத்தை ஆரம்பித்துள்ளது.

எனினும் விமானத்தின் சமநிலையை பராமரிக்கும் அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சுமார் 40 நிமிடங்களின் பின்னர் அது கட்டுநாயக்க விமான நிலையத்தில் மீண்டும் தரையிறங்கியதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த விமானத்தில் 85 பேர் பயணித்துள்ளனர்.

பின்னர் ஏனைய மாற்று விமானங்களின் ஊடாக குறித்த 85 பேரும் பெங்களூர் நோக்கி அனுப்பப்பட்டனர். (அ)

# போதை விருந்து நடத்திய பொலிஸார் இருவர் கைது

கொழும்பு, மார்ச் 21

விடுதியில் போதைப்பொருள் விருந்து நடத்திய பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் பெண்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - மொறட்டுவை ஒன்றில் வைத்தே பொலிஸார் இவர்களை போதைப்பொருளுடன் கைது செய்தனர்.

கைதானவர்களிடம் இருந்து ஒரு கிராம் ஹஸிஸ், 20 மில்லிகிராம் ஹெரோயின், 40 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

# இரு வர்த்தகர்கள் கைது!

கொழும்பு, மார்ச் 21

இலங்கைக்குச் சட்டவிரோதமான முறையில் 12 கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொண்டு வந்த வர்த்தகர்கள் இருவர் நேற்று முன் தினம் செவ் வாய்க்கிழமை இலங்கை சுங்கப் பிரிவினரால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர் .

கைதான வர்த்தகர்களில் ஒருவர் அம்பலாங்கொடை பகுதியில் வசிக்கும் 60 வயதுடையவர் எனவும் மற்றையவர் கொழும்பு பம்பலப்பிட்டியில் வசிக்கும் 65 வயதுடையவர் எனவும் தெரியவந்துள்ள .

12 கோடி ரூபா பெறுமதியான இந்த தங்க நகைகள் இவர்களது பயணப் பொதிகளில் வைக்கப்பட்டிருந்த விஸ்கி போத்தல் பெட்டிகளில் அடைக்கப்பட்டிருந்ததாகச் சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர். (அ)

ஈழநாடு
Eelanadu
21.03.2024 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தம் தரும் படிப்பினை

2009இற்கு பின்னரான தமிழர் அரசியல் என்பது அடிப்படையில் சர்வதேச அழுத்தங்களை அண்ணார்ந்து நோக்கிக் கொண்டிருந்த அரசியலாகும். அதற்கு திரைக்கதை மற்றும் வசனம் எழுதியதே - கடந்த பதினான்கு வருடங்கள் நடந்தன. ஆனால், எழுதிய திரைக்கதைகள் மற்றும் வசனங்களை வைத்து எடுக்க முற்பட்ட திரைப்படத்துக்கு எவருமே பணம் போட முன்வரவில்லை. இந்த நிலையில் அவ்வாறான திரைக்கதைகளை தொடர்ந்தும் எழுதுவதில் சலிப்பு ஏற்பட்டதான நிலைமையே தற்போது காணப்படுகின்றது.

சர்வதேசம் தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் அளவுக்கு அதிகமான நம்பிக்கை ஊட்டப்பட்டது. ஆனால், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு நோக்கிய பயணத்தில் ஒரு சிறு முன்னேற்றத்தைக்கூட காண முடியவில்லை. இதற்கு அடிப்படையான காரணம் சர்வதேசம் தொடர்பில் தெளிவான புரிதல்கள் இன்மை. முதலில் சர்வதேச சமூகம் என்பதால் பலம்பொருந்திய நாடுகளே குறிக்கப்படுகின்றன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அவ்வாறான பலம் பொருந்திய நாடுகள் அனைத்தும் நீதி விவகாரத்தில் ஒரே பார்வையைக் கொண்டிருக்கவில்லை. ஒரு நாட்டுக்கு நீதியாகத் தெரிகின்ற விடயம் - இன்னொரு நாட்டுக்கோ அநீதியாகத் தெரியும். இந்த அடிப்படையில்தான் ஒவ்வொரு நாடுகளும் ஏனைய நாடுகளின் தீர்மானங்களை எதிர்கொள்ளும். இதனைப் புரிந்து கொண்டால் மட்டும்தான் நாம், சர்வதேசத்திடம் எதனை - எந்தளவு எதிர்பார்க்க முடியும் என்பதைத் தீர்மானிக்க முடியும்.

தற்போது பேசுபொருளாக இருக்கின்ற இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தம் இதற்கு சிறந்த உதாரணமாகும். இந்த யுத்தம் தொடர்பில் பலவாறான குற்றச்சாட்டுக்கள் இஸ்ரேல்மீது சுமத்தப்பட்டாலும்கூட சீனா தவிர்ந்த உலகின் பலமான நாடுகள் அனைத்தும் இஸ்ரேலின் பாதுகாப்பு தொடர்பில் மட்டுமே பேசி வருகின்றன. யுத்தத்ததை நிறுத்துமாறு பலரும் வலியுறுத்தியபோதிலும்கூட - குறிப்பாக, ஐக்கிய நாடுகள் சபையில் 124 நாடுகள் கையெழுத்திட்டு பிரேரணையை முன்வைத்த போதிலும்கூட இஸ்ரேலோ யுத்தத்தை நிறுத்தவில்லை.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் காசா பகுதியில் அமெரிக்கா கப்பல் ஒன்றை நிறுத்தி உதவி வருகின்றது. அமெரிக்கா எண்ணினால் யுத்தத்தை நிறுத்துமாறு இஸ்ரேலுக்கு உத்தரவிட முடியும். ஆனால், அதனை அமெரிக்கா செய்யவில்லை - மாறாக யுத்தம் முன்னெடுக்கப்படுவதை ஆதரித்துக் கொண்டு பாதிக்கப்பட்ட பலஸ்தீனியர்களுக்கு உணவுப் பொதிகளை வழங்குகின்றது.

இதிலிருந்து, நாம் எதனைக் கற்றுகொள்ள முயற்சிக்கின்றோம்? வாய்ப்புகள் கிடைக்கின்றபோது, பாதிக்கப்பட்ட மக்கள் அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறில்லாது போனால் பின்னர் எந்தவொரு மீட்பராலும் நம்மைப் பாதுகாக்க முடியாது. ஏனெனில், ஒவ்வொரு பலமான நாடுகளுக்கும் சொந்த நலன்கள் உள்ளன. அவர்களின் நலன்களை எதற்காகத் தமிழர்களின் உரிமைகளுக்காக வீணாக்க வேண்டும்? இந்தக் கேள்வியிலிருந்துதான் ஒவ்வொரு விடயங்களையும் நோக்க வேண்டும்.

உலகில் எந்தவொரு கட்டமைப்பும் நலன்சார் அரசியலுக்கு அப்பால்பட்ட அப்பழுக்கற்ற கட்டமைப்புகள் அல்ல. அனைத்துமே பலம் பொருந்திய நாடுகளின் நலன்களுக்கு உட்பட்டவைதான். இதனைப் புரிந்துகொண்டுதான் விடயங்களை உற்றுநோக்க வேண்டும்.

# வெளிநாட்டில் அகதி தஞ்சம் கோரிய இளைஞர் விசாரணைக்கு அழைப்பு

*வவுனியா, மார்ச் 21*

நாடு ஒன்றிடம் அகதி தஞ்சம் கோரிய இளைஞன் பயங்கரவாத தடுப்புப் பிரிவால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

பல வருடங்களாக அவர் புலம்பெயர் நாடொன்றில் வசித்து வரும் நிலையில் அவர் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

வவுனியா - ஓமந்தையை சேர்ந்த தர்மலிங்கம் ரதீபன் (வயது -32) என்ற இளைஞனே இவ்வாறு பயங்கரவாத தடுப்பு பிரிவால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இளைஞனுக்கான அழைப்பாணையை பொலிஸார் அவரின் பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர் என்று தெரிய வருகின்றது.

(ஐ)

# நடுநிலைமை கொள்கையை இலங்கை பின்பற்றவேண்டும்!

## ரஷ்ய தூதுவர் தெரிவிப்பு

*கொழும்பு, மார்ச் 21*

இலங்கை நடுநிலைமை கொள்கையை பின்பற்ற வேண்டும் என்று இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவென் எஸ் ஜகார்யன் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் விளாடிமிர் புடின் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளமை மேற்குலகின் தலையீடுகள் வெற்றியளிக்கவில்லை என்பதை புலப்படுத்தியுள்ளன. உக்ரைன் யுத்தத்தை அடிப்படையாக வைத்து ரஷ்ய ஜனாதிபதி தேர்தலின் முடிவுகளை மாற்றியமைப்பதற்கு அமெரிக்கா தலைமையிலான கூட்டணி மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளமையை புடினின் வெற்றி வெளிப்படுத்தியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், இலங்கை உட்பட பல நாடுகளில் மேற்குலகின் தலையீடுகள் குறித்து சுட்டிக்காட்டியுள்ள அவர் மேற்குலகின் எதிர்பார்ப்புக்கு மாறாக ரஷ்ய வாக்காளர்கள் எவ்வாறு ஜனாதிபதி புடினுக்கு ஆதரவாக வாக்களித்தனர் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தவிர, ரஷ்யா - இலங்கை உறவுகள் தொடர்பில் கருத்து வெளியிட்ட ரஷ்ய தூதுவர் 2022 ஜூன் மாதம் ரஷ்யாவின் ஏரோபிளொட் விமானம் தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பில் மீண்டும் கவலை வெளியிட்டார்.

அத்துடன், இந்த நடவடிக்கையை எந்த காரணத்தினாலும் நியாயப்படுத்த முடியாது என்றும் இதன் பின்னர் சுற்றுலா பயணிகள் இலங்கை வருவது குறைந்தது எனவும் கூறினார். எனினும், ரஷ்யா மீண்டும் தனது விமான சேவையை ஆரம்பித்த போது 2 இலட்சத்து 30 ஆயிரம் ரஷ்யர்கள் இலங்கை வந்துள்ளனர் என்றும் கூறினார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே ரஷ்ய தூதுவர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

# குருபூசையும் சொற்பொழிவும்

*யாழ்ப்பாணம், மார்ச் 21*

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிகாமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த பெரியபுராணச் சிறப்பு சொற்பொழிவுத் தொடர் 50 (கோச் செங்கட் சோழன்) நடைபெறவுள்ளது.

ஆனைக்கோட்டை - சாவல்கட்டு - அந்திக்குழி ஞான வைரவர் காளி அம்பாள் ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு இந்த சொற்பொழிவு நடைபெறும்.

சேக்கிழார் பெருமானின் குருபூசையைத் தொடர்ந்து சொற்பொழிவை சைவப்புலவர் பொன். சந்திரவேல் சிவாலயங்கள் அமைத்து சிவத்தொண்டு புரிந்த நாயனார்” என்ற தலைப்பில் ஆற்றுவார்.

(ஐ)

# சுக்கிர வார சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், மார்ச் 21*

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் சுக்கிர வார சிறப்புச்சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து சொற்பொழிவை பண்டிதர் த. மனோஜ்குமார் “ஆறுதலை தருவான் ஆறுமுகன்“ என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார்.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மார்ச் - 21 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - பங்குனி 08
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : துவாதசி




**மேடம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் ஆதரவு உங்களுக்கு உண்டு. பூர்வீக சொத்துபிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் விட்டு விட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கன்னி**
உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்கும்படி இருக்கும். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். சாதிக்கும் நாள்.

**துலாம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். புதிய முயற்சியில் வெற்றி கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். தலைமையின் ஆதரவு கிட்டும். சக ஊழியர்கள் உங்களுக்கு மிக வும் உதவியாக இருப்பார்கள்.தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறை கூறுவார்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**மகரம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். எதிர்பார்த்த வேலைகள் முடியும் நாள்.

**கும்பம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள், பழைய சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**மீனம்**
குடும்பத்தில் உங்களின் நேரத்தை செலவழிப்பார்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

# இந்தியாவிலுள்ள இலங்கை தமிழர்களுக்கு குடியுரிமை!

## தி. மு. க. வாக்குறுதி

*சென்னை, மார்ச் 21*

'இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்படும்" என்று தமிழ்நாட்டை ஆளும் கட்சியான தி. மு. க. தனது தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்துள்ளது.

தி. மு. கவின் தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் தலைவரும் தமிழக முதல்வருமான மு. க. ஸ்டாலின் நேற்றுக் காலை சென்னை அறிவாலயத்தில் வெளியிட்டார்.

இதன்போது, அவர் ஆற்றிய உரையில், "சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம் என்பது எங்களது வழிகாட்டும் நெறிமுறை. அதன் அடிப்படையில் தான் இந்த தேர்தல் அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது. இது தி. மு. க. தேர்தல் அறிக்கை மட்டுமல்ல தமிழக மக்களின் தேர்தல் அறிக்கையாக அமைந்துள்ளது.

2014இல் ஆட்சிக்கு வந்த பாசிச பா. ஜ. க. இந்தியாவை பாழ்படுத்திவிட்டது. இந்தியாவின் கட்டமைப்புகள் அனைத்தும் சிறுக, சிறுக சிதைக்கப்பட்டுள்ளன. கையில் கிடைத்த வாய்ப்பை பா. ஜ. க. நழுவவிட்டது. இனியும் பா. ஜ. க. ஆட்சி தொடர்வது நாட்டுக்கு நல்லதல்ல. மக்கள் ஆட்சியை செம்மைப்படுத்தும் ஆட்சியாக புதிய ஆட்சி அமைய வேண்டும். அத்தகைய ஆட்சி அமைந்த பின்னர் தமிழக மக்களுக்கு செய்யக் கூடியவற்றை இந்தத் தேர்தல் அறிக்கையில் விளக்கியுள்ளோம் - என்றார்.

அந்த அறிக்கையில், மாநிலங்கள் உண்மையான சுயாட்சி பெறும் வகையில் அரசமைப்பு திருத்தப்படும், ஆளுநருக்கு அதிக அதிகாரம் வழங்கும் பிரிவு 361 நீக்கப்படும், உச்ச நீதிமன்றக் கிளை சென்னையில் அமைக்கப்படும், புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்கப்படும், ஒன்றிய அரசின் பணிமனைகளில் தமிழ்மொழி பயன்படுத்தப்படும், அனைத்து மாநில மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படும், 'இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்படும் என்பன அடங்கிய விடயங்கள் வாக்குறுதிகளாக அளிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# ll புதுமுகங்களுடன் தி. மு. க. வேட்பாளர் பட்டியல் வெளியீடு

*சென்னை, மார்ச் 21*

மக்களவைத் தேர்தலில் திமுக சார்பில் 21 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் விவரங்களை அக்கட்சியின் தலைவரும் தமிழக முதல்வருமான மு. க. ஸ்டாலின் அறிவித்தார். இதில் புதிய வேட்பாளர்களாக 11 பேர் அறிவிக்கபட்டுள்ளனர்.

தமிழகத்தின் 39 தொகுதிகள் மற்றும் புதுச்சேரி தொகுதிக்கு ஒரே கட்டமாக வரும் ஏப்ரல் 19ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. தமிழகத்தில் தி. மு. க., அ. தி. மு. க., பா. ஜ. க. தலைமையில் பல்வேறு கட்சிகள் இணைந்து தேர்தலை சந்திக்கின்றன.

இதில், 21 தொகுதிகளில் தி. மு. கவும் ஏனைய 19 தொகுதிகளும் கூட்டணி கட்சிகளும் போட்டியிடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அ. தி. மு. கவுடன் கூட்டணி அமைத்தது தே. மு. தி. க.!

*சென்னை, மார்ச் 21*

பாராளுமன்றத் தேர்தலில் அ. தி. மு. க. - தே. மு. தி. க. கூட்டணி உறுதியாகியுள்ளது. தே. மு. தி. கவுக்கு 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று அ. தி. மு. க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தல் 2024இற்கான அ. தி. மு. க. முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை நேற்று வெளியிட்டது.

இதன்போது, நீண்ட நாட்களாக கூட்டணி தொடர்பாக தே. மு. தி. க. - அ. தி. மு. க. இடையே பேச்சு நீடித்துவந்த நிலையில், நேற்று அந்தக் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று பழனிசாமி அறிவித்துள்ளார்.

தே. மு. தி. கவுக்கு எந்தெந்த தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பது குறித்த தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை. (ஐ)

# பா. ஜ. கவுக்கான ஆதரவைக் கண்டு தி. மு. கவுக்கு தூக்கம் போய்விட்டது

## இந்தியப் பிரதமர் மோடி

*சேலம், மார்ச் 21*

தமிழகத்தில் பா. ஜ. கவுக்குக் கிடைக்கும் ஆதரவைக் கண்டு தி. மு. க. கூட்டணியின் தூக்கம் தொலைந்துவிட்டதாக பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சேலத்தில் நேற்று முன்தினம் நடந்த பொதுக்கூட்டத்தில் இந்தியப் பிரதமர் பேசுகையில்,

பாஜகவுக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும் வாக்களிக்க வேண்டும் என தமிழக மக்கள் முடிவு செய்து விட்டார்கள். வளர்ச்சியடைந்த தமிழகம், வலிமையான பாரதம் உருவாக பா. ஜ. கவுக்கு வாக்களிக்க வேண்டும். பொருளாதாரத்தில் முன்னேறவும், விவசாயிகள், மீனவர்கள் நலன் காக்கப்படவும் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற வேண்டும்.

இம்முறை 400இற்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறுவோம். வளர்ச்சியடைந்த தமிழகத்தை உருவாக்க தேசிய ஜனநாயகக் கூட்டணி உறுதி பூண்டுள்ளது. அதற்கேற்ப எங்கள் கூட்டணி அமைந்துள்ளது. பா. ம. க. இணைந்த பிறகு தேசிய ஜனநாயக கூட்டணி தமிழகத்தில் வலுவடைந்து விட்டது.

# தி. மு. கவின் வாக்குறுதிகள் வெறும் காகிதம் மட்டுமே!

*சென்னை, மார்ச் 21*

தி. மு. கவின் போலி தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் வெறும் காகிதம் மட்டும்தான் என்று பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

இதுகுறித்து அவரது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில்,

கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலின்போது, தி. மு. க. கொடுத்த 99வீத தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டதாக, மேடைக்கு மேடை பொய் கூறிக் கொண்டிருந்த முதல்வர் ஸ்டாலின், அதே தேர்தல் வாக்குறுதிகளை, அப்படியே மறுபடியும் வருகின்ற பாராளுமன்றத் தேர்தலுக்கும் கொடுத்திருப்பதிலிருந்தே, எந்தத் தேர்தல் வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருப்பது தெரிகிறது.

மூன்றாவது முறையாகப் பிரதமர் பொறுப்பேற்பது உறுதி என்ற நிலையில், தி. மு. கவின் போலி தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் வெறும் காகிதம் மட்டும்தான் என்பதை மக்கள் முழுமையாக உணர்ந்திருக்கிறார்கள். இனியும் தி. மு. கவின் நாடகங்களை நம்ப மக்கள் தயாராக இல்லை - என்றார். (ஐ)

# நாம் தமிழரின் 40 வேட்பாளரும் ஒரே மேடையில்!

*சென்னை, மார்ச் 21*

மக்களவைத் தேர்தலை ஒட்டி நாம் தமிழர் கட்சி சார்பில் 40 தொகுதிகளிலும் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகம் ஒரே மேடையில் நடைபெறவுள்ளது.

நாளை மறுநாள் சனிக்கிழமை சென்னையில் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் தலைமையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் வேட்பாளர் அறிமுகம் நடைபெறவுள்ளது. (ஐ)

# இரு நாட்டு மீனவர்களையும் மோத விடும் அரச சூழ்ச்சியே 'கடல் காவலர்' படையணி!

## மீனவர்களுக்கு சுரேஷ் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 21

**இந்திய இழுவைமடிப் படகு தொடர்பான பிரச்சினைக்கு இந்திய அரசாங்கத்துடன் பேசி தீர்வை எட்டுவதை விட்டு கடல் காவலர்கள் எனும் பெயரில் புதிய படையணியை உருவாக்குவது கடலில் தேவையற்ற முரண்பாடுகளை ஏற்படுத்தும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**



சமகால நிலைமைகள் தொடர்பாக நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய-இலங்கை மீனவர் பிரச்னைகள் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம். இந்தியாவின் துறைசார் அமைச்சுடன் பேசி ஈழத்து மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் தீர்வு காணப்படவேண்டும். அதனை விடுத்து கடல் காவலர்கள் என்றும் குடியியல் தன்னார்வ படையை உருவாக்கி தமிழக மீனவர்களுடன் மோதவிடுவது ஆரோக்கியம் அல்ல. இது இரு நாட்டு மீனவர்களிடமும் முரண்பாட்டை ஏற்படுத்தும். இலங்கை கடற்படையை நல்லவராக்கி இலங்கை மீனவர்களை கெட்டவர்களாக காட்டும் எண்ணமோ என்ற சந்தேகம் நிலவுகிறது.

இவ்வாறு நடந்தால் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான தமிழக மீனவர்களின் போராட்டம் ஈழத்தமிழர்களுக்கு எதிரானதாக திரும்பும்.

குறித்த பிரச்னையை ஜனாதிபதியும் அமைச்சரும் பார்த்துக் கொள்ள வேண்டும். இதை கடற்றொழிலாளர்களிடம் கையளித்தால் தேவையற்ற குழப்பம் ஏற்படும்.

கடற்படை செய்யவேண்டிய வேலையை சிவில் அமைப்பிடம் வழங்கப்படுவதை நாம் விரும்பவில்லை. கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் தாக்கல் செய்த அமைச்சரவை பத்திரத்தை மீளப் பெற வேண்டும்.

குறித்த விடயத்தின் ஆழத்தை புரிந்து கடற்றொழிலாளர் சங்கங்கள் எதிர்க்க வேண்டும்-என்றார்.

(அ)

# 'வேள்வித் திருமகன்' இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

திருமறைக் கலாமன்றம் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் தயாரித்து வழங்கும மாபெரும் அரங்க ஆற்றுகையான திருப்பாடுகளின் நாடகம் இவ்வாண்டு 'வேள்வித் திருமகன்' என்னும் பெயரில் இன்று வியாழக்கிழமை முதல் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல.238, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

திருப்பாடுகளின் நாடகமரபில் தனக்கென்றொரு தனித்துவத்தை தக்கவைத்திருக்கும் திருமறைக் கலாமன்றம் இவ்வாற்றுகையை காலத்திற்கேற்ற அரங்க நுட்பங்களை, சிந்தனைகளை உள்வாங்கி புதிய புதிய பார்வைகளுடன் மேடையேற்றி வந்துள்ளது. இம்முறை மேடையேற்றப்படும் ' வேள்வித் திருமகன்' திருப்பாடுகளின் நாடகம் முதன்முதலாக 2012 ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2014 ஆம் 2016 ஆம் ஆண்டுகளிலும் மேடையேற்றப்பட்டது. தற்போது நான்காவது தடவையாக மேடையேற்றப்படுகின்றது.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ. மரியசேவியர் அடிகளார் திருப்பாடுகளின் நாடகப் பாரம்பரியத்தினை தமிழ் மரபுக்குரிய தனித்துவங்களுடன் வளர்த்து வந்துள்ளார். திருப்பாடுகளின் நாடகத்துக்கான பெரும்பாலான பிரதிகளை நீ.மரியசேவியர் அடிகளாரே எழுதியுள்ளார். அவரால் இறுதியாக எழுதப்பட்ட பிரதியே' வேள்வித் திருமகன்'. மரிய சேவியர் அடிகளாரால் எழுதப்பட்ட திருப்பாடுகளின் நாடகப் பிரதிகளில் இருந்து மொழிநடையிலும்,பொருள் அளிக்கையிலும் சற்று மாறுபட்டதாக எழுதப்பட்ட இப்படைப்பு வேள்விக் கருவை மையப்படுத்தியதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வழமை போல் பிரமாண்டமான அரங்கஅமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும்,அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்கள் இவ்வாற்றுகையில் பங்கேற்கின்றார்கள்.

(அ)

# சீனாவின் வெங்காயம் விரைவில் கிடைக்கும்!

கொழும்பு, மார்ச் 21

சீனாவிடம் முன்பதிவு செய்யப்பட்ட பெரிய வெங்காயம் இன்னும் 5 நாட்களில் நாட்டுக்கு கிடைக்கப் பெறும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இந்த வெங்காயம் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டதும், உள்நாட்டு சந்தையில் வெங்காயத்தின் விலை குறைவடையும் என வர்த்தக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்கு மேலதிகமாக பெரிய வெங்காயத்துக்கு பதிலாக இளஞ்சிவப்பு வெங்காயத்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், இளஞ்சிவப்பு வெங்காய இறக்குமதிக்கு அறவிடப்



படும் 70 ரூபாய் வரி 10 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

அந்த வகையில், சீனாவிடம் முன்பதிவு செய்யப்பட்ட பெரிய வெங்காயம் இன்னும் 5 நாட்களில் நாட்டுக்கு கிடைக்கப்பெறும் என அவர் தெரிவித்துள்ளார்.

(அ)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்ற சர்வதேச நீர் தினத்தைச் சிறப்பிக்கும் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், மார்ச் 21

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சர்வதேச நீர்தினம் பற்றிய விழிப்புணர்வை ஊட்டும் சிறப்பு ஒன்றுகூடல் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விஞ்ஞான நெறியைச் சேர்ந்த ஆசிரிய மாணவி வீரராகவன் மாயாதேவி நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தினார். ஆசிரிய மாணவர் உரையை விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவி தவராசா ஜீற்றா ஆற்றினார்.

இவ்வாண்டு நீர்த்தினத்திற்கான தொனிப்பொருளாக அமையும் அமைதிக்கான நீர்ப் பங்கீடு (Leveraging Water for Peace)என்பதைத் தொனிப்பொருளாகக் கொண்டு நீர்த்தினம் பற்றிய சிறப்புரையை வடமா



காண விவசாய அமைச்சு உத்தியோகத்தர் நடராஜா ஐங்கரன் வழங்கினார். அதிதிக்கான அறிமுகவுரையை விரிவுரையாளர் கு. பாலஷண்முகன் மேற்கொண்டார்.

ஆசிரிய மாணவர்கள் தயாரித்த நீர்ப் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு ஆவணப்படமும் காட்சிப்படுத்தப்பட்டது.

சிறப்புரையாற்றிய ந.ஐங்கரன் கலாசாலைச் சமூகத்தால் கௌரவிக்கப்பட்டதோடு ஆவணப்படம் தயாரித்த ஆசிரிய மாணவர்களை சபையோர் எழுந்து நின்று கரகோஷித்துப் பாராட்டுத் தெரிவித்துக் கௌரவித்தனர்.

(அ)

# உலகின் சிறப்பான அம்புலன்ஸ் சேவைகளில் ஒன்றாக சுவசெரிய

## பாராட்டியுள்ளது உலக வங்கி

கொழும்பு, மார்ச் 21

1990 எனும் அவசர அழைப்பு இலக்கத்தின் ஊடாக டிஜிற்றல் தொழில்நுட்பத்தை இலவசமாகப் பயன்படுத்தி இலவச சேவையை வழங்கும் இலங்கை சுவசெரிய அம்புலன்ஸ் சேவை உலகின் சிறந்த அம்புலன்ஸ் சேவைகளில் ஒன்றாக விளங்குவதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

சுவசெரிய அம்புலன்ஸ் சேவையானது உலகில் வேகமாக பதிலளிக்கும் அம்புலன்ஸ் சேவைகளில் ஒன்றாக மாறியுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

உலக வங்கியின் தெற்காசிய பிராந்திய துணைத்தலைவர் மார்ட்டின் ரேஸர், தெற்காசியாவில் வறுமை ஒழிப்பு என்ற தொனிப்பொருளின் கீழ் உலக வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் சுவசெரிய தொடர்பிலான அறிக்கையை பதிவு செய்துள்ளார்.

குறித்த அறிக்கையின் பிரகாரம், 2016ஆம் ஆண்டு இலங்கையில் சுவசெரிய அம்புலன்ஸ் சேவை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர்,1990 ஆம் ஆண்டு முதல் 1.8 மில்லியன் இலங்கையர்கள் சுவசெரிய அம்புலன்ஸ் சேவையுடன் இணைந்துள்ளனர்.

மேலும், அழைப்பு வந்த 12 நிமிடங்களுக்குள் நோயாளரை அருகிலுள்ள வைத்தியசாலை அல்லது பராமரிப்பு மையத்திற்கு அழைத்துச்செல்ல சுவசெரிய அம்புலன்ஸ் தனது சேவையை நிறைவேற்றியுள்ளது.

அதற்கமைய, உலகிலேயே அதிவேகமாக செயற்படும் அம்புலன்ஸ் சேவைகளில் ஒன்றாக சுவசெரிய சேவை குறிப்பிடப்பட்டுள்ளது.

சுவசெரிய, தெற்காசியாவில் ஒரு புரட்சிகர தொழில்நுட்பம், சுகாதாரம் மற்றும் அவசரகால சேவைகள் திட்டமாக அபிவிருத்தி நாடுகளில் முன்னோடியாக உள்ளதாக உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

(அ)

# வவுனியா பொது வைத்தியசாலையில் மருந்தாளர்கள் பணிப் புறக்கணிப்பு!



வவுனியா, மார்ச் 21

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் மருந்தாளர்கள் பல்வேறு கோரிக்கைளை முன்வைத்து நேற்று புதன்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பதவி உயர்வு மற்றும் புதிய நியமனம் ஆகியவற்றில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தே மருந்தாளர்கள் சுகயீன விடுமுறையில் ஈடுபட்டனர்.

இலங்கை முழுவதும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையிலேயே வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையிலும் மருந்தாளர் பிரிவுகள் முற்றாக செயழிந்தன.

இப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக கிளினிக், வெளிநோயாளர் பிரிவு ஆகியவற்றுக்கு வருகை மேற்கொண்ட நோயாளிகள் பல்வேறு அசோகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர்.

(அ)

# பிக்குகளின் பேரரசியல் அபிலாஷைகளை தடுக்கும்வரை மோதல்கள் அரங்கேறலாம்!

## சர்வதேச நெருக்கடிகள் குழு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 21

**சட்டத்துக்கு மதிப்பளிக்குமாறு ‘கொழும்பு அரசாங்கம்’ வலியுறுத்தும் வரையிலும், நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணிகளை அபகரிப்பதையும், இன-மதப்பரவலை மாற்றியமைப்பதையும் இலக்காகக்கொண்டு இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் இயங்கிவரும் பௌத்த பிக்குகளின் பேரரசியல் அபிலாஷைகளைத் தடுக்கும் வரையிலும் வெடுக்குநாறிமலை விவகாரத்தை ஒத்த மோதல்கள் தொடர்ந்து அரங்கேறும் என சர்வதேச நெருக்கடிகள் குழுவின் இலங்கை ஆய்வாளர் அலன் கீனன் எச்சரித்துள்ளார்.**

வவுனியா மாவட்டத்தின் வெடுக்குநாறிமலையில் உள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த 8 ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று பூசை வழிபாடுகளில் ஈடுபடச்சென்ற பக்தர்களுக்கு பொலிஸாரால் இடையூறு விளைவிக்கப்பட்டதுடன், இரவு வேளையில் வழிபாடுகளைத் தொடர முற்பட்டோர் அங்கிருந்து வலுகட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். அது மாத்திரமன்றி ஆலயப்பூசகர் உள்ளடங்கலாக எண்மர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு எதிரான வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

இதனை வரவேற்கத்தக்க செய்தி எனக் குறிப்பிட்டுள்ள சர்வதேச நெருக்கடிகள் குழுவின் இலங்கை ஆய்வாளர் அலன் கீனன், இருப்பினும் சட்டத்துக்கு மதிப்பளிக்குமாறு ‘கொழும்பு அரசாங்கம்’ வலியுறுத்தும் வரையிலும், நாட்டின் வட, கிழக்கு மாகாணங்களில் காணிகளை அபகரிப்பதையும், இன-மதப்பரவலை மாற்றியமைப்பதையும் இலக்காகக்கொண்டு இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் இயங்கிவரும் (சிறியளவிலான) பௌத்த பிக்குகளின் பேரரசியல் அபிலாஷைகளைத் தடுக்கும் வரையிலும் இவ்வாறான மோதல்கள் தொடர்ந்துகொண்டேயிருக்கும் என எச்சரித்துள்ளார். (அ)

# 2 உழவு இயந்திரங்கள் மோதி பெரும் விபத்து!

## ஒருவர் பலி; இருவர் காயம்!



கொழும்பு, மார்ச் 21

மாத்தளை , வில்கமுவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 2.20 மணியளவில் மதவாச்சியிலிருந்து அம்பாறை பிரதேசத்திற்கு மரக்கன்றுகளை வெட்டுவதற்காக பொருட்களை ஏற்றிச் சென்ற இரண்டு உழவு இயந்திரங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த இரண்டு உழவு இயந்திரங்களில் ஒன்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல் மற்றைய உழவு இயந்திரத்துடன் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர் புளியங்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞராவார்.

# சுங்க அதிகாரிகளின் போராட்டம் நிறைவு

கொழும்பு, மார்ச் 21

சுங்கத் திணைக்கள அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்டிருந்த தொழிற்சங்க நடவடிக்கை முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

சுங்க நிதியத்தை திறைசேரிக்கு உள்வாங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, சுங்க அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் சேவையில் இருந்து விலகியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை முதல் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை அவர்கள் முன்னெடுத்திருந்தனர்.

இதன் காரணமாக சுமார் 4,500 கொள்கலன்கள் சுங்க பிரிவில் விடுவிக்கப்படாமல் தேங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான பின்னணியில் இந்த விடயம் தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவின் தலைமையில் நேற்று பிற்பகல் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தது.

சுங்க அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள், நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மற்றும் திறைசேரியின் அதிகாரிகள் இதில் பங்கேற்றிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய நேற்று முற்பகல் 9 மணிமுதல் வழமை போன்று தங்களது பணி முன்னெடுக்கப்பட்டதாக சுங்க அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# வெளிநாடுகளின் ஆராய்ச்சிக் கப்பல்கள் இலங்கையில் எரிபொருள் நிரப்ப அனுமதி

## வெளிவிவகார அமைச்சு தகவல்

கொழும்பு, மார்ச் 21

வெளிநாடுகளின் ஆராய்ச்சிக் கப்பல்கள் இலங்கை துறைமுகங்களில் எரிபொருள் மீள்நிரப்புதலில் ஈடுபடுவதற்கு இலங்கை அனுமதி வழங்கும் என இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியின் ஆராய்ச்சி கப்பலுக்கு இலங்கை அனுமதி வழங்கியமை குறித்து சீன தூதரகம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள நிலையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஆராய்ச்சிகளில் ஈடுபடும் கப்பல்களுக்கே இலங்கை தடை விதித்துள்ளது - ஆராய்ச்சி கப்பல்கள் மீள்நிரப்புதலில் ஈடுபடுவதற்கு இலங்கை தடை விதிக்கவில்லை என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் நிலுக்க கதிருகமுவ தெரிவித்தார்.




ஜேர்மனியின் ஆராய்ச்சிக் கப்பல் எரிபொருள் மீள் நிரப்புவதற்கே கொழும்பு துறைமுகத்திற்கு வந்தது. அதனால் அதற்கு அனுமதி வழங்கப்பட்டது எனவும் அவர் கூறினார்.

14 மாதங்களில் சீனாவின் ஆராய்ச்சிக் கப்பல்கள் இரண்டு தடவை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதை தொடர்ந்து இந்தியாவும் அமெரிக்காவும் வெளியிட்ட கடும் பாதுகாப்பு கரிசனைகள் காரணமாக ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ஒரு வருட காலத்திற்கு ஆராய்ச்சி கப்பல்களுக்கு தடை விதித்துள்ளது.

எனினும் இந்தத் தடையை அறிவித்தவேளை அரசாங்கம் வெளிநாட்டு ஆராய்ச்சிக் கப்பல்களின் எரிபொருள் மீள்நிரப்புதலிற்கு அனுமதி வழங்கப்படுமா என்பதை தெளிவாக தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் தற்போதே மீள்நிரப்புவதற்கான அனுமதி வழங்கப்படும் என்பதை இலங்கை அரசாங்கம் வெளிப்படையாக தெரிவித்துள்ளது. (அ)

# நாட்டில் வேலையின்றி 40 ஆயிரம் பட்டதாரிகள்

## சஜித் பிரேமதாச தகவல்

கொழும்பு, மார்ச் 21

அரசியல்வாதிகளின் ஏமாற்றுக் கதைகளுக்கும் விசித்திரக் கதைகளுக்கும் அடிமைப்பட்டு அரசியல் அதிகாரங்களின் கைக்கூலிகளாக மாறும் காலம் ஒழிக்கப்படவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசியல், மத, சமூக, கலாசார, பொருளாதார, கல்வி மற்றும் சுகாதார உரிமைகளுக்கான சரியான சூழலை உருவாக்குவதன் மூலம் குடிமக்களின் திறமைகளால் உயர் நிலைகளுக்கு செல்வதற்கான காலம் வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது கிட்டத்தட்ட 40,000 பட்டதாரிகள் நமது நாட்டில் வேலையின்றி உள்ளனர். இலவசக் கல்வியில் கல்வியைப் பெற்று பல்கலைக்கழகங்களுக்குச் சென்ற 40,000 பேரை வேலையில்லாதோர் வரிசையில் நிற்க வைப்பது நியாயமானது அல்ல.

இந்த 40,000 பேர் கல்வியில் உள்ள குறைபாடுகள் காரணமாகவே வேலையின்மை வரிசையில் நிற்கின்றனர்.



இலங்கையை முதல் ஸ்தானத்திற்கு கொண்டு வரும் கொள்கையை முன்னெடுப்பதற்கு, ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்ப கல்வியறிவு, கணினி அறிவு என்ற பரப்பில் கூடிய ஈடுபாட்டை காட்ட வேண்டும்.

ஸ்மார்ட் நாட்டைக் கட்டியெழுப்புவதில்இ கல்வி கூட ஸ்மார்ட்டாக அமைய வேண்டும், எனவே ஐக்கிய மக்கள் சக்தி ஸ்மார்ட் கல்விக்காக முதலீடு செய்யும்-என்றார். (அ)

# எங்கள் கப்பலுக்கு தடை விதித்து ஜேர்மன் கப்பலுக்கு அனுமதியா?

## சீனத் தூதரகம் போர்க்கொடி

கொழும்பு, மார்ச் 21

வெளிநாட்டு ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு இலங்கை ஒரு வருடத் தடையை விதித்துள்ள நிலையில், ஜேர்மனியை சேர்ந்த ஆராய்ச்சிக் கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு வருவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதியளித்துள்ளமை குறித்து இலங்கைக்கான சீனத் தூதரகம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஜேர்மனியின் கப்பலின் ஆராய்ச்சிக் கப்பலுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியமை குறித்து இலங்கைக்கான சீனத் தூதரகம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது என தெரிவித்துள்ள ஆசிய இராஜதந்திரியொருவர், அனைத்து நாடுகளினதும் ஆராய்ச்சிக் கப்பல்களுக்கும் அனுமதி மறுப்பது என



இலங்கை தீர்மானித்திருந்தால் சீனா இந்த விடயத்தை பெரிதுபடுத்தியிருக்காது எனவும் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனைச் சேர்ந்த ஆராய்ச்சிக் கப்பலுக்கு இலங்கை அனுமதி வழங்கியதை அரசாங்க வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

கொழும்பு தற்போது ஜேர்மனியின் கப்பலுக்கு அனுமதி வழங்கியுள்ளதால் சீனா தனது கப்பல்களுக்கும் அனுமதியை கோரும் என அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ)

# பௌத்த மதத்தை சீரழிக்க திட்டமிட்ட செயல்பாடுகள்

## விமல் சபையில் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 21

**பௌத்த மதத்தை சீரழிக்கும் திட்டமிட்ட செயற்பாடுகள் நடப்பதாகவும், இதற்கு இடமளிக்காது அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பௌத்த மதத்தை பாதுகாக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்றும் தேசிய சுதந்திர முன்னணி தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பில் பௌத்த மதத்தின் பாதுகாப்பு தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் எழுத்து மூலம் அரசாங்கத்திற்கு சில விடயங்களை அறிவித்துள்ளனர். பிக்குவை போன்ற வேடமிட்ட ஒருவர், அவரின் மகன் அமெரிக்காவில் வசிக்கின்றார். இந்த நபர் நாங்கள் இலங்கையில் ஏற்றுக்கொண்டுள்ள திரிபீடகத்தை தவறு என்று கூறியும், நாட்டின் பௌத்தர்கள் நம்பும் சில விடயங்களை நிராகரித்தும் கருத்துக்களை



வெளியிடுகின்றார். உதாரணத்துக்கு புத்த பெருமான் இலங்கையில் பிறந்தார் என்று கூறிக்கொண்டு புத்தக்கயாவை இந்து ஆலயமாக காட்ட முயற்சிக்கின்றார். இந்தியாவில் இருக்கும் இந்து அடிப்படைவாதிகளுக்கும் புத்தகயாவை இந்து ஆலயமாக காட்ட வேண்டும் என்றே முயற்சிக்கின்றனர்- என்றார்.

(அ)

# விசேட சுற்றிவளைப்பில் 913 பேர் கைது

கொழும்பு, மார்ச் 21

போதைப்பொருள் கடத்தல் காரர்களை கைது செய்யும் வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசேட சுற்றிவளைப்பில் 883 ஆண்களும் 30 பெண்களும் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் 54 பேரை மேலதிக விசாரணைகளுக்காயக தடுத்து வைக்க நீதிமன்ற அனுமதி பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

15 பேரின் சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை, மேல் மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 205 கிராம் ஹெரோய்ன், 269 கிராம் ஐஸ் மற்றும் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மொத்தமாக 85 சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அதில் 80 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்புகளில் 5 பெண் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# அரச மருந்தாளர்கள் நேற்று ஒரு நாள் வேலைநிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 21

அரச மருந்தாளர்கள் ஒரு நாள் வேலைநிறுத்தத்தை நேற்று மேற்கொண்டனர்.

வெற்றிடங்களுக்கு தகுதி வாய்ந்த பட்டதாரிகளை சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படாமையை சுட்டிக்காட்டி இந்த கவனயீர்ப்பு வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்பட்டது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட தகுதியானவர்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்படாது உள்ளதாக அரச மருந்தாளர்கள் சங்கத்தின் தலைவர் துஷார ரணதேவ தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு அதிகாரிகளின் அசமந்தப்போக்கினால் இவ்வாறு வெற்றிடங்கள் நிரப்பப்படாதுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கிராமிய மற்றும் பிரதான வைத்தியசாலைகளில் மருந்தாளர்களுக்கு வெற்றிடம் காணப்படுவதாக துஷார ரணதேவ தெரிவித்தார்.

இந்த நிலையில் ஒரு வருட பயிற்சியை முடித்த சிலரை மருந்து கலவையாளர்களாக நியமித்து பயிற்சியளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

(அ)

# மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரம் ஆர்ப்பாட்டம் குறித்த வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, மார்ச் 21

மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை பிரச்னைக்கு தீர்வு பெற்றுத்தருமாறு ஜனாதிபதியை வலியுறுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பான வழக்கு எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு - ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில், நீதவான் தர்சினி அண்ணாத்துரை முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த தீர்மானம் அறிவிக்கப்பட்டது.

பிரதிவாதிகள் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் உள்ளிட்டோர் மன்றில் நேற்று ஆஜராகவில்லை.

கடந்த வருடம் ஒக்ரோபர் 8ஆம் திகதி மட்டக்களப்பு - செங்கலடிக்கு ஜனாதிபதி வருகை தந்த சந்தர்ப்பத்தில், மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு தீர்வு கோரி வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பண்ணையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 37 பேருக்கு எதிராக வழங்கு தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கீரிமலை நகுலேச்சர ஆலய ஆதீன கர்த்தா காலமானார்

யாழ்ப்பாணம், மார்ச் 21

பஞ்ச ஈச்சரங்களின் ஒன்றான கீரிமலை நகுலேச்சர ஆலய ஆதீன கர்த்தா ந. குமாரசவாமிக் குருக்கள் நேற்று அதிகாலை தனது 71 ஆவது வயதில் காலமானார்

குறிப்பாக ஈழத்தின் மூத்த சிவாச்சாரியாரான மறைந்த நகுலேஸ்வரக் குருக்களின் மகனான இவர் கடந்த வருடம் தந்தையின் மறைவின் பின் ஆதீனகர்த்தாவாக இருந்து ஆலயத்தை வழிநடத்தி வந்தார்.

அண்மைக் காலமாக உடல்



நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று அதிகாலை இறைவனடி சேர்ந்துள்ளார். (அ)

# கூராய் சீது விநாயகர்புரம் கிராம மக்களின் அவலநிலை

## மன்னார் மாவட்ட செயலாளர் நேரடி விஜயம்

மன்னார், மார்ச் 21

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான கூராய் சீது விநாயகர் புரம் கிராமத்திற்கு மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் நேரடியாக சென்று பார்வையிட்டு அந்த கிராமத்து மக்களின் தேவைகளை கேட்டறிந்தார்.

இந்த நிகழ்வானது குறித்த கிராமங்களின் கிராம சேவையாளர் சி.ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது கருத்து தெரிவித்த பொதுமக்கள்,

தங்கள் கிராமத்தில் உள்ள வீதிகள் மற்றும் குடிதண்ணீர் பிரச்னைகள் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் உள்ளன. மேலும் கிராமத்தில் இருந்து 20 கிலோ மீற்றர் தூரம் சென்றே மருத்துவம், கல்வி மற்றும் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது.

பிரதான வீதிக்கு செல்வதற்கு முன்னதாக உள்ள சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரமான வீதியானது பாரிய குன்றும், குழியுமாக காணப்படுகிறது.

மழை காலங்களில் குறித்த குளக்கட்டு வீதி முற்றிலும் பாவிக்க முடியாதவாறு காணப்படும். இரவு நேரங்களில் விஷப் பூச்சிகள் கடித்தால் அல்லது கர்ப்பிணி தாய்மார்களுக்கு



ஏற்படும் பிரசவ வலி போன்ற அவசர தேவைகளுக்கு இந்த வீதிகள் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

மேலும் இங்குள்ள மக்கள் அனைவரும் விவசாயத்தையும் தோட்டப் பயிர்ச் செய்கையையும் நம்பி வாழ்பவர்கள்.

அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வியாபாரம் செய்வதற்கான போக்குவரத்து வசதிகள் இல்லை. இதனால் மிகவும் பாடுபட்டு உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளை லாபம் எதுவும் இல்லாமல் குறைந்த விலைகளில் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் என தெரிவித்தனர்.

கிராமத்து மக்களின் குறைகளை கேட்டறிந்த மாவட்ட செயலாளர், பாடசாலை, வீதிகள், குளங்கள், தோட்டக் காணிகள் போன்றவற்றை பார்வையிட்டு இவற்றிற்கான தீர்வுகள் விரைவில் பெற்றுத் தருவதாக தெரிவித்துள்ளார்.

(அ)

# போதைப்பொருளுக்கு எதிராக திருகோணமலையில் பேரணி!

**திருமலை, மார்ச் 21**

**திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்கள், சிறுவர் வள நிலையங்கள் இணைந்து போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வுப் பேரணி நேற்று முன் தினம் இடம்பெற்றது.**

**நாவற்சோலை சிறுவர் வள நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பேரணியில், குச்சவெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்களை சேர்ந்த இளைஞர்கள், சிறுவர்கள், பொதுமக்கள், அரச அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் உட்பட 500 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.**

பேரணி நிலாவெளி பொலிஸ் நிலையத்தினை அடைந்து, நிலாவெளி பொலிஸ் அதிகாரிகளிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில்-

நாம், எமது இளைஞர்களை, எமது எதிர்கால சந்ததியினரின் வாழ்வியலை பாதிக்கும் போதைப்பொருள்பாவனையை எமது சமூகத்தில் இருந்து முற்றாக ஒழிப்பதற்கு உறுதி பூண்டுள்ளோம்.

இலங்கையில் போதைப் பொருள் பாவனை காரணமாக பல்லாயிரக்காணக்கான மாணவர்கள் புனர்வாழ்வு முகாம்களில் சிகிச்சைபெறுவதாக தெரியவருவதுடன், ஆண்டுதோரும் இவ்வெண்ணிக்கை அதிகரித்து வருவது கவலைக்குரிய விடயமாகும்.

போதைப்பொருள்பாவனை காரணமாக கல்வி, பொருளாதாரம், குடும்பம், சமூக அந்தஸ்த்து, ஆயுள் போன்றவற்றை இழப்பதுடன் ஏனைய குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், உறவினர்கள் சுற்றத்தாக்கும் ஆபத்தான நபர்களாக மாற்றும் போதைப்பொருட்களை, எமது சமூகத்தில் இருந்து முற்றாக ஒழிக்கவேண்டியது சமூகப்பற்றுமிக்க இளைஞர்களாகிய எமது கடமையாக உள்ளது.

அந்தவகையில்

• சமூகத்தின் மத்தியில் உள்ள போதைப்பொருள்பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு.




• சமூகத்தின் மத்தியில் போதைப்பொருள் விற்பனைக்கு எதிரான சட்ட செயற்பாடுகள்.

போன்றவற்றை இளைஞர்களாகிய நாம் முன்னெடுக்கவுள்ளோம்.

மேலும் போதைப்பொருள் விற்பனைக்கு எதிரான தண்டனைகளை கடுமையாக்குமாறு அரசாங்கத்தை வேண்டுவதுடன், உளப்பூர்வமாக போதைப் பொருள் விற்பனை மற்றும் பாவனையை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், போதைப்பொருள் விற்பனையாளர்களை அடையாளம் காட்டும் நபர்களை பொறுப்புணர்வுடன் பாதுகாக்குமாறும் இலங்கை பொலிசாரிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் எமது சமூகச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பையும் வழிகாட்டல்களையும் மேற்கொள்ளுமாறு வேண்டிநிற்கின்றோம்.

எமது பிரதேச இளைஞர்களை எமது சமூகத்தின் கல்வி, பொருளாதாரம் மற்றும் கலாச்சார எழுச்சிக்காக எம்முடன் அணி திரளுமாறு வேண்டுகின்றோம்-என்றுள்ளது. (அ)



# சம்மாந்துறை கோட்டக்கல்வி காரியாலயம் புதுப்பொலிவு!

*காரைதீவு, மார்ச் 21*

சம்மாந்துறை வலயத்தில் உள்ள சம்மாந்துறை கோட்டக் கல்வி காரியாலயம் புதுப்பொலிவு பெற்று வருகிறது.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானாவின் வழிகாட்டலில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஏ. நசீர் எடுத்த பெரு முயற்சியின் காரணமாக இக் கோட்ட கல்வி காரியாலயம் புதுப் பொலிவு பெற்று சிறப்பாக காட்சியளிக்கின்றது.

அங்கு ஒன்று கூடல் மண்டபம் ஏனைய மண்டபங்கள் மற்றும் கல்விசார் தகவல்கள் மிசன் விஷன் நவீன முறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வலயக்கல்விப் பணிமனையின் புதன்கிழமை கல்வி அபிவிருத்திக் கூட்டம் பரீட்சார்த்தமாக நடைபெற்றது.

இது தவிர அந்த முழு கட்டடமே வர்ணப் பூச்சுகளோடும் ஏனைய கல்வி செயற்பாடுகளுக்கு பொருத்தமான காட்சிகளோடும் நவீனம் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது.

இவ்வாறு சம்மாந்துறை போல நாவிதன்வெளி, இறக்காமம் ஆகிய கோட்டங்களும் புதுப் பொலிவு பெற வேண்டும் என்று வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா கேட்டுக்கொண்டார். (அ)

# லேகிய பைக்கெற்றுகளுடன் ஒருவர் கைது!

*அம்பாறை, மார்ச் 21*

காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போது 735 மதன மோதக பைக்கெற்றுகளுடன் 35 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி.கஜநாயக்க தெரிவித்தார்.

வாகன மொன்றில் குறித்த போதை மாத்திரைகள் எடுத்து வரப்பட்ட போதே கைது செய்யப்பட்டுள்ளதாக பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

காத்தான்குடி டெலிகொம் வீதியில் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைதான நபரிடமிருந்து 735 மதன மோதக பைக்கெற்றுகள் மீட்கப்பட்டுள்ளதுடன் வாகனமும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ரிதிதென்ன மையவாடிக்கான சுற்று மதில் தொகுதி திறப்பு



*மட்டக்களப்பு, மார்ச் 21*

மட்டக்களப்பு , ரிதிதென்ன பகுதியில் மிக நீண்டகால தேவையாக காணப்பட்ட மையவாடிக்கான சுற்று மதில் தொகுதி அல்-நூர் தொண்டர் நிறுவனத்தின் நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்டு வைக்கப் பட்டது.

அல்-நூர் தொண்டர் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எஸ்.எம். அலியார் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் பங்கேற்று சுற்று மதில் தொகுதியினை திறந்து வைத்தார்.

இதன்போது இச்சமூக சேவை திட்டத்திற்கு பங்காற்றியவர்களுக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (அ)

# கிழக்கின் முழு அபிவிருத்தி மூலம் நாட்டின் கடன் நெருக்கடிக்கு தீர்வு

## கூறுகிறார் செந்தில் தொண்டமான்

*கொழும்பு, மார்ச் 21*

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். கிழக்கு மாகாணத்தை முழுமையாக அபிவிருத்தி செய்வதன் மூலம் நாட்டின் கடன் நெருக்கடியைத் தீர்க்க முடியும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில், நாம் கிழக்கு மகாணத்தில் தற்




போது பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். முப்பது வருட யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மாகாணம் என்பதால் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் கிழக்கு மாகாணம் வளர்ச்சியில் பின்னடைவைச் சந்தித்துள்ளது. எனவே இந்த மாகாணத்திற்குரிய மூன்று மாவட்டங்களினதும் வளர்ச்சியில் அதிக கவனம் எடுக்குமாறு ஜனாதிபதி எனக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதற்காக கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் உள்ள வளங்கள் தொடர்பில் நாம் தற்போது கண்டறிந்துள்ளோம். உதாரணமாக இறால் வளர்ப்பு, கனிய வளங்கள், துறைமுகம், விமான நிலையம், நீர் வளம், சுற்றுலாத் துறை மற்றும் விவசாய நிலங்கள் போன்றவற்றை எவ்வாறு நாம் அபிவிருத்தி செய்வது குறித்து அவதானம் செலுத்தியுள்ளோம். எனவே இவற்றை மேம்படுத்துவதன் மூலம் எமது நாட்டின் கடன்களை அடைப்பதற்கு கிழக்கு மாகாணம் மாத்திரம் போதுமானது என்பதைக் கூற வேண்டும்-என்றார். (அ)

# காசாவில் அல்ஜசீரா ஊடகவியலாளரை சித்திரவதை செய்த இஸ்ரேலியப் படை!

## தொடர்கின்றது ஊடகவியலாளர்களை இலக்குவைக்கும் இஸ்ரேலின் நடவடிக்கை



**ஜெருசலேம், மார்ச் 21**

**காசாவில் அல்ஜசீரா ஊடகவியலாளரை கைதுசெய்த இஸ்ரேலிய படையினர் 12 மணிநேரத்தின் பின்னர் அவரை விடுதலை செய்துள்ளனர்.**

**காசாவின் அல்ஸிபா மருத்துவமனையில் ஊடகவியலாளரை கைதுசெய்த இஸ்ரேலிய படையினர் அவரை கடுமையாக தாக்கியுள்ளனர்.**

அல்ஸிபா மருத்துவமனையை இலக்குவைத்து நான்காவது தடவையாக இஸ்ரேல் மேற்கொண்டுள்ள நடவடிக்கை குறித்த செய்திசேகரிப்பதற்காக சக ஊடகவியலாளர்களுடன் அல்ஜசீராவின் அல்கூலும் மருத்துமவனைக்கு சென்றிருந்தார்.

அல்ஜசீராவின் செய்தியாளரை இஸ்ரேலிய படையினர் இழுத்துச்சென்றனர். அவரது ஊடக உபகரணங்களை அழித்தனர் என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஊடகவியலாளர்களிற்கான அறையில் குழுமிய ஏனைய ஊடகவியலாளர்களையும் கைதுசெய்தனர் என விடுதலை செய்யப்பட்ட பின்னர் அல்ஜசீரா ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கண்கள் கைகளை கட்டிய இஸ்ரேலிய படையினர் அவர்களை நிர்வாணமாக்கி தாக்கினார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாராவது அசைந்தால் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்வோம் என இஸ்ரேலிய படையினர் எச்சரித்தனர் எனவும் குறிப்பிட்டுள்ள அவர் எனது சகாக்கள் சிலரும் விடுதலை செய்யப்பட்டனர் என்பதை அறிகின்றேன் அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பது தெரியவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

காசாவின் மீது இஸ்ரேல் கடந்த ஐந்து மாதங்களாக மேற்கொண்டு வரும் தாக்குதல் குறித்த செய்திகளை வெளியிடும் செய்தியாளர்களிற்கான தளமாக அல்ஷிபா மருத்துவமனை காணப்படுகின்றது.

அல்ஜசீரா செய்தியாளரை கைதுசெய்து சித்திரவதை செய்தனர் தாக்கினார்கள் என அல்ஜசீராவின் மற்றுமொரு செய்தியாளரான ஹனி மஹ்மூட் தெரிவித்துள்ளார்.

(அ)



# காசாவின் சில பகுதிகளில் கடும் உணவு பற்றாக்குறை!

ஜெருசலேம், மார்ச் 21

காசாவின் சில பகுதிகளில் கடுமையான உணவு பற்றாக்குறை நிலவுவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

வடக்கு காசாவில் வாழும் 70 சதவீதமான மக்கள் இந்த அபாய நிலையை எதிர்கொண்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

காசாவில் உடனடி போர் நிறுத்தம் அமுல்ப்படுத்தப்படாவிட்டால், இந்த நிலை மேலும் மோசமாகும் என்பதுடன், பல மரணங்களும் ஏற்படக்கூடிய அபாய நிலை உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், இரண்டு நாடுகளின் அதிகாரிகளும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# யூதர்கள் இஸ்ரேலை வெறுக்கின்றார்கள்!

## தேர்தல் நெருங்கும் வேளை டிரம்ப் சர்ச்சை கருத்து



நியூயோர்க், மார்ச் 21

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் இந்தாண்டு நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக கருதப்படுகிற டொனால்ட் டிரம்ப், யூதர்கள் யாரெல்லாம் ஜனநாயக கட்சிக்கு ஆதரவளிக்கிறார்களோ அவர்கள் இஸ்ரேலை வெறுக்கிறார்கள் எனத் தெரிவித்தமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காஸாவில் இஸ்ரேலின் தாக்குதலால் பலி எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால் இஸ்ரேல் பிரதமர் நெத்தன்யாகுவை ஜனநாயகக் கட்சியினர் அடிக்கடி விமர்சிப்பது குறித்து டிரம்பிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த டிரம்ப், “அவர்கள் இஸ்ரேலை வெறுக்கிறார்கள் என நினைக்கிறேன். ஜனநாயகக் கட்சி இஸ்ரேலை வெறுக்கிறது” எனத் தெரிவித்தார்.

மேலும், “யூதர்கள் யாரெல்லாம் ஜனநாயகக் கட்சிக்கு வாக்களிக்கிறார்களோ அவர்கள் தங்கள் மதத்தை வெறுக்கிறார்கள்.

அவர்கள் இஸ்ரேலைப் பற்றிய அனைத்தையும் வெறுக்கிறார்கள். இஸ்ரேல் அழிவதைக் குறித்து அவர்கள் வெட்கப்பட வேண்டும்” என டிரம்ப் தெரிவித்தார்.

பெரும்பாலான அமெரிக்க யூதர்கள் ஜனநாயகக் கட்சியினராக கருதப்படும் நிலையில் டிரம்பின் இந்தக் கருத்து உடனடியாக ஜனநாயகக் கட்சியினராலும் யூத தலைவர்களாலும் விமர்சிக்கப்பட்டுள்ளது.


பைடனின் அரசியல் பிரசார முகமை, “இங்கு வெட்கப்பட வேண்டிய ஒரே ஆள் டிரம்ப் தான். இந்த நவம்பரிலும் தோற்கப் போவது டிரம்ப் மட்டும் தான்.

அமெரிக்கர்கள் டிரம்பின் வெறுப்பு பிரசாரம், தனிநபர் தாக்குதல்கள், அதிதீவிர முன்னெடுப்புகளை வெறுக்கிறார்கள்” எனத் தெரிவித்துள்ளது.

(அ)

# ஹமாஸ் இராணுவத் தலைவர் வான்வழித் தாக்குதலில் பலி!

## வெள்ளை மாளிகை அதிரடி அறிவிப்பு



நியூயோர்க், மார்ச் 21

ஹமாஸ் அமைப்பின் மூத்த இராணுவத் தளபதி மவான் இசா இஸ்ரேல் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

மத்திய காசாவில் உள்ள நுசிராத் அகதிகள் முகாமுக்குச் சொந்தமான சுரங்கப்பாதை வளாகத்தில் கடந்த வாரம் நடத்தப்பட்ட தாக்குதலில் இசா கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஒக்ரோபர் 7 ஆம் திகதி போர் தொடங்கியதில் இருந்து உயிரிழந்த ஹமாஸின் மூத்த தலைவர் இசா ஆவார்.

ஹமாஸ் இராணுவப் பிரிவின் துணைத் தளபதியான இசா, இஸ்ரேலின் மிகவும் தேடப்படும் நபர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார்.

ஹமாஸ் தலைவரை அதன் பயங்கரவாத தடுப்புப்பட்டியலில் வைத்த ஐரோப்பிய ஒன்றியம், சுமார் 1,200 பேரைக் கொன்ற ஹமாஸ் தலைமையிலான ஒக்டோபர் 7 தாக்குதல்களுடன் அவரை நேரடியாக தொடர்புபடுத்தியுள்ளது.

ஒக்ரோபர் 7 முதல், ஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவர்கள் பலரை இஸ்ரேலிய இராணுவம் கொன்றுள்ளது.

பெய்ரூட்டின் தெற்கு புறநகர்ப் பகுதியான தாஹியேவில் இடம்பெற்ற வெடிவிபத்தில் ஹமாஸின் அரசியல் தலைவர் சலே அல்-அரோரி கொல்லப்பட்டார். இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் தான் காரணம் என நம்பப்படுகிறது.

வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சுல்லிவன், ஏனைய ஹமாஸ் தலைவர்கள் காசாவில் உள்ள ஹமாஸ் சுரங்கப்பாதை வலையமைப்பில் மறைந்திருப்பதாக நம்பப்படுகிறது என்றார்.

காசா பகுதியை ஆளும் பாலஸ்தீனிய குழு, இசாவின் மரணம் குறித்த செய்திகள் தொடர்பில் அதிகாரப்பூர்வமாக கருத்து தெரிவிக்கவில்லை.

இதனிடையே, காசாவில் மோதல் வெடித்ததில் இருந்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அண்டனி பிளிங்கன் இந்த வாரம் மத்திய கிழக்கு நோக்கி செல்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# சீனாவில் பிறப்பு வீதம் வீழ்ச்சி!

## குழந்தைகளுக்கான சேவை நிறுத்தம்

பீஜிங், மார்ச் 21

பிறப்பு விகிதம் வீழ்ச்சியடைந்தமையினால் சீனாவில் உள்ள பல வைத்தியசாலைகளில் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு வழங்கும் சேவைகளை நிறுத்தியுள்ளன. இதனை டெய்லி எக்கனமிக் செய்தி நிறுவனம் உத்தியோகபூர்வமாக தெரிவித்துள்ளது.

சீனாவின் கிழக்கு ஜெஜியாங் மற்றும் தெற்கு ஜியாங்சி உட்பட பல்வேறு மாகாணங்களில் உள்ள வைத்தியசாலைகளில் கடந்த இரு மாதங்களில் மகப்பேறு பிரிவுகளை மூடுவதற்கான யோசனையை முன்வைத்துள்ளன.

இந்நிலைமை எதிர்காலத்தில் சீனாவின் பிறப்பு விகிதம் மற்றும் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என தொழில்வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 2023 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் தென்கொரியாவில் திருமணம் செய்யும் தம்பதிகளின் எண்ணிக்கை கடந்த பத்து வருடங்களில் உயர்வடைந்துள்ளது. (அ)

# கிளிநொச்சி பாடசாலைகளிலிருந்து இடை விலகியுள்ள 32 மாணவர்கள்!

## அதிக அக்கறை செலுத்துமாறு பணிப்பு

**கிளிநொச்சி, மார்ச் 21**

**கிளிநொச்சியில் குடும்பப் பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 32 மாணவர்கள் கல்வி இடை விலகியுள்ளதாக புள்ளிவிவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**குறித்த விடயம் தொடர்பில் அதிக அக்கறை செலுத்துமாறு பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.**

மாவட்ட சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பாதுகாப்பு தொடர்பான முதல் காலாண்டுக்கான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் நேற்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது.

இதன் போது, சிறுவர்களின் பாதுகாப்பு, கல்வி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பேசப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 32 மாணவர்கள் கல்வி செயல்பாட்டிலிருந்து இடை விலகியதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், 29 பேர் மீள் இணைக்கப்பட்டதாகவும் புள்ளிவிவரப் பட்டியலில் குறிப்பிடப்பட்டது.

மேலும் இருவர் மீள் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 11 மாணவர்களும், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 02 மாணவர்களும் அடையாளம் காணப்பட்டு மீள் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 05 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு மூவர் கல்விக்காக மீள் இணைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 14 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு 13 பேர் மீள் இணைக்கப்பட்டுள்ளனர்.

குடும்ப பொருளாதாரம், வறுமை, பெற்றோரின் அக்கறையின்மை உள்ளிட்ட காரணங்களால் இவ்வாறு மாணவர்களின் கல்வி இடைவிலகலிற்கான அதிக காரணமாக அமைந்துள்ளதாக உத்தியோகத்தர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலை ஒழுக்காற்று நடவடிக்கை எனும் பெயரில் 6 மாதங்கள் வரை மாணவர்களை இடை நிறுத்திய சம்பவமும் இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த ஒழுக்காற்று நடவடிக்கையினால் இடைவிலகல் ஏற்படாத வகையில் இருக்க வேண்டும் எனவும், அவ்வாறான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படின் அவ்விடயம் தொடர்பில் அறிவித்தல் வழங்கப்பட வேண்டும்.

வலயக் கல்வி பணிமனைக்கு அறிவித்தல் வழங்கப்படும் அதே வேளை, பிரதேச செயலகத்துக்கும் அறிவித்தலை வழங்க வேண்டும்.

பாடசாலை கல்வி, பாதுகாப்பு தொடர்பில் தொடர் அதிக கண்காணிப்பு அவசியம் எனவும், பிரதேச செயலகங்களில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் கூட்டங்களை நடத்த வேண்டும் எனவும் பதில் அரசாங்க அதிபர் குறிப்பிட்டார். (அ)

# பல்கலை மாணவர்கள் 29 பேர் வைத்தியசாலையில் அனுமதி!

கொழும்பு, மார்ச் 21

செவனகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்கும் 29 மாணவர்கள் உணவு ஒவ்வாமை காரணமாக சுகயீன மடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுகயீனமடைந்த மாணவர்கள் சூரியவெவ பிரதேசத்தில் உள்ள வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

26 மாணவர்களும் 3 மாணவிகளுமே இவ்வாறு சுகயீனமடைந்துள்ளனர்.

இரவு உணவுக்காக பயன்படுத்திய மீன் வகையே இதற்கு காரணம் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மாணவர்களின் நிலை கவலைக்கிடமாக இல்லை எனவும் வைத்தியர்கள் கூறினர். (அ)

# ஜனாதிபதித் தேர்தலில் சஜித் வெற்றி பெற்ற பின் மாகாண சபைத் தேர்தல்!

## கூறுகிறார் திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு, மார்ச் 21

ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றிபெற்ற பின்னர் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் மாகாணசபைத் தேர்தலும் விரைவில் நடத்தப்படும் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதியால் காணாமல் ஆக்கப்பட்டுள்ள உள்ளாட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்களையும் நடத்த வேண்டியுள்ளது. அதிகாரப் பகிர்வு கோட்பாட்டின் அடிப்படையில்தான் மாகாணசபை உருவாக்கப்பட்டது. அந்தசபைகளை ஆளுநர்கள்தான் தற்போது நிர்வகிக்கின்றனர். மக்கள் பிரதிநிதிகள் இல்லை. இதுகூட அரசமைப்பு மீறல் செயலாகும்.

எனவே, ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றி பெற்ற பின்னர் பொதுத்தேர்தல் நடத்தப்படும். ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியின்கீழ் அதன் பின்னர் கூடியவிரைவில் மாகாண மற்றும் உள்ளாட்சி சபைத் தேர்தல்கள் நடத்தப்படும். மக்களின் வாக்குரிமையை பாதுகாப்போம்-என்றார். (அ)

# திருத்தம் அமுலாகாவிட்டால் தேர்தல் தாமதமாகும் அபாயம்

## பவ்ரல் அமைப்பு எச்சரிக்கை!

கொழும்பு, மார்ச் 21

தேர்தல் முறைமை திருத்த யோசனைகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படாவிட்டால், தேர்தல் தாமதமாகும் அபாயம் உள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரிவித்துள்ள பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி-

தேர்தல் முறைமை திருத்தப்பட்டு எல்லை நிர்ணயப் பணிகள் துரித கதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

தற்போது, தேர்தல் முறைமையில் திருத்தம் செய்வது தொடர்பான யோசனை அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது பாராளுமன்றத் தேர்தல் முறையை கலப்பு விகிதாசார முறைக்கு கொண்டு செல்வது பற்றியதாகும். எனவே, பாராளுமன்றத் தேர்தல் முறைமையில் திருத்தம் செய்யப்படுவதாயின், அதில் ஒரு அங்கமாக வரும் எல்லை நிர்ணயத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக இணக்கம் காணப்பட வேண்டும்.

இருப்பினும், ஏதோ ஒரு வகையில் எல்லை நிர்ணயம் முடிவுக்கு வரவில்லை என்றால், எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்திற்குள், தேர்தல் முறையில் திருத்தம் செய்யப்பட்டாலும், தற்போதுள்ள தேர்தல் முறையிலேயே தேர்தல் நடத்தும் அதிகாரத்தை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கும் திருத்தத்தை இந்த வரைவில் கட்டாயம் சேர்க்கவேண்டும்.

இல்லையெனில், தேர்தல் முறை திருத்தப்பட்டு, சட்டம் இயற்றப்பட்டாலும் எல்லை நிர்ணயம் முடிவடையாமல் போகலாம்-என்றார். (அ)

# மத்திய வங்கிப் பணியாளர்களின் சம்பள அதிகரிப்பை நிறுத்த கோபா குழு பரிந்துரை!



கொழும்பு, மார்ச் 21

மத்திய வங்கிப் பணியாளர்களின் சம்பள அதிகரிப்பை நிறுத்திவைக்குமாறு அரச நிதிக் குழு பரிந்துரை செய்துள்ளது.

மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரம் தொடர்பான அரசி நிதிக்குழுவின் அறிக்கையை நேற்று பாராளுமன்றில் முன்வைத்து உரையாற்றியபோதே, குறித்தக் குழுவின் தலைவர் ஹர்ஷ டீ சில்வா பாராளுமன்றில் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான அரச நிதிக் குழுவின் அறிக்கையை பாராளுமன்றில் முன்வைக்கின்றேன்.

நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க இலங்கை மத்திய வங்கிப் பணியாளர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரம் தொடர்பான அரச நிதிக்குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

சம்பள அதிகரிப்புக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் எதிர்ப்பினை தெரிவித்திருந்தனர். மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மை பேணப்பட வேண்டும்.

சம்பள அதிகரிப்பு தொடர்பாக இறுதி இணக்கப்பாட்டுக்கு வரும்வரை சம்பள அதிகரிப்பு ஒத்திவைக்கப்பட வேண்டும்.

மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் வரை சம்பள அதிகரிப்பை நிறுத்துவதற்கு நிதியமைச்சரினால் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும்.

நான்கு வாரங்களுக்குள் இதற்கான அறிக்கை சமர்ப்பிக்கப்படும்-என்றார். (அ)

# காதலனுடன் போதைப்பொருள் விநியோகம் செய்த யுவதி கைது!

கொழும்பு, மார்ச் 21

தனது காதலனுடன் மோட்டார் சைக்கிளில் சென்று, போதைப்பொருள் விநியோகித்த யுவதியொருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது காதலன் தப்பியோடியதாகவும் மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர்.

விலத்தவ பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய யுவதி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான யுவதி தனது காதலனுடன் இணைந்து போதைப் பொருள் விநியோகத்தில் சில காலமாக ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி, தும்மலசூரிய விலத்தாவ வீதியில் இளைஞன் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் சென்ற சந்தேகத்திற்கிடமான யுவதியை பொலிஸ் குழு கைது செய்துள்ளது.

மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனையிடுவதற்கு பொலிஸார் முயன்றபோது, மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற இளைஞன், காதலியை கைவிட்டு, பொலிஸாரிடம் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

பொலிஸார் யுவதியை சோதனையிட்டபோது, அவரிடம் ஹெரோயின் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட யுவதி மாதம்பை பொலிஸாருக்கு அழைத்து வரப்பட்டு, அவரிடம் விசாரணை நடத்திய போது, பொலிஸாரைத் தவிர்த்து சென்றது தனது காதலன் எனவும், அவரும் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும், போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டவர் எனவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

யுவதியின் தாயார் சில காலங்களுக்கு முன்னர் இவர்களை விட்டு பிரிந்து வேறு ஒரு திருமணம் செய்து கொண்டு தற்போது வேலைக்காக வெளியூர் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ)

## கோப்...

வசந்த யாப்பா பண்டார, துமிந்த திஸநாயக்கா ஆகியோர் பதவி விலகினர்.

31 பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் கோப் குழுவுக்கு எதிர்க்கட்சியை சேர்ந்தவரே தலைவராக நியமிக்கப்படுவது மரபாக உள்ளது. இந்த நிலையில், ஆளும் தரப்பை சேர்ந்த ரோஹித அபேகுணவர்த்தன கோப் குழுவின் தலைவராக அண்மையில் நியமிக்கப்பட்டார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே கடந்த திங்கட்கிழமை எரான் விக்ரமரட்ண பதவி துறந்தார். இதைத் தொடர்ந்து நேற்று வரை 10 எம். பிக்கள் தமது அங்கத்துவத்தைத் துறந்துள்ளனர். (ஐ)

## 3,000...

வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பழமையும் பாரம்பரியமும் கொண்ட ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் அடிவாரத்தில் தமிழ் பிராமிய கல்வெட்டுகள் மற்றும் வட்டெழுத்துகளை காண முடியும். வெடுக்குமாறிமலையின் உச்சியில் ஆதிலிங்கேஸ்வரம் என்ற சிவன் ஆலயம் அமைந்துள்ளது.

ஐந்து தலைமுறைகள் கடந்து அங்கு வாழும் மக்கள் இந்த ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டு வருகின்றன. 1988 ஆம் ஆண்டு அப்பகுதி இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த போது, அவர்களது பாதுகாப்புடன் அங்கு மகாசிவராத்திரி இடம்பெற்றிருந்தது.

1990களின் பின்னர் விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் அங்கு மகா சிவராத்திரி இடம்பெற்று வந்தது.

2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்தப் பின்னரும் அங்கு குடியேறிய மக்கள் 2010ஆம் ஆண்டுமுதல் ஆதிலிங்கேஸ்வரரை வழிபட்டு வந்துள்ளனர்.

தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவுடன் இந்த ஆலயத்தை கைப்பற்ற பௌத்த துறவிகள் செயல்பட்டு வருகின்றனர்.

2018ஆம் ஆண்டு முதல் இங்கு தமிழர்களின் வழிபாட்டு உரிமையை பறித்து வருகின்றனர். அதன் பின்னர் இங்கு வழிபடும் உரிமையை பறிக்கும் வழக்கு 2019இல் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டது. இதன்மூலம் ஆலய பூசகர் உட்பட பலர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

தொல்பொருள் திணைக்களத்தாலும் 2019ஆம் ஆண்டு வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில், ஆலயத்தின் அனைத்து விக்கிரகங்களும் அடியோடு அகற்றப்பட்டமை 2023ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது.

புதரொன்றில் எறியப்பட்டிருந்த சிவலிங்கத்தை மீண்டும் அங்கு பிரதிஷ்டை செய்து பிரதேச மக்கள் வழிபட்டு வருகின்றனர். இந்த நிலையில் இவ்வாண்டு மகாசிவராத்திரியை சிறப்பாக செய்ய முற்பட்ட போது பூசகர் உட்பட 8 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

வழிபாடுகளை தடுக்க 500 இற்கும் மேற்பட்ட கலகமடக்கும் பொலிஸார் இங்கு நிறுத்தப்பட்டு மக்களை அடக்க முற்பட்டனர். பக்தர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதலையும் நடத்தினர். பொலிஸார் இங்கு மனிதாபிமானமற்ற விதத்திலேயே நடந்துகொண்டனர்.

இந்த சம்பவத்தை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். இது 3000 ஆண்டு பழமை வாய்ந்த தமிழர்களின் ஆலயமாகும்.

இந்த நாட்டில் வாழ்வதற்கான உரிமை இல்லையென்றால் எவ்வாறு நல்லிணக்கம் பற்றி சிந்திக்க முடியும். நல்லிணக்கம் என்பது பேச்சளவில் இருப்பது அல்ல. ஒருநாட்டின் மக்களை அனுசரிப்பதில்தான் அது தங்கியுள்ளது.

ஆகவே, வெடுக்குநாறிமலையில் உள்ள மக்கள் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபட எந்தவொரு தடையும் இருக்கக்கூடாது.

ஜனாதிபதி மற்றும் தொல்பொருள் திணைக்களம் இதற்கு உரிய நடவடிக்கையெடுக்க வேண்டும்-என்றார். (அ)

## நாளை...

காணி கையளிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது.

அத்துடன், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அரச காணிகளில் குடியிருப்போருக்கான காணி உறுதியையும் வழங்குவார். (அ)

## கடலில்...

உயிரிழந்தவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் - ஆரியகுளத்தில் உள்ள விடுதி ஒன்றில் வந்து தங்கியுள்ளார். அவரும் அந்த விடுதியின் உரிமையாரும் அங்கு பணியாற்றிவரும் ஊழியருமாக மூவர் நேற்று சேந்தாங்குளம் கடலில் சென்று நீராடியுள்ளனர்.

இதன்போது, ஒருவர் கடல் அலையால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். அவரைக் காப்பாற்ற மற்றவர் முயன்றுள்ளார். இருவரும் நீரில் மூழ்கி காணாமல் போயினர். இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியினர் சேர்ந்து இருவரையும் தேடினர். தேடுதலில், இருவரையும் சடலங்களாகவே மீட்க முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

## தேர்தலில்...

தாம் தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கோட்டாபயவை பதவியிலிருந்து நீக்குவதற்கு குடும்பத்தார் சதி என ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், அவ்வாறான ஒரு தேவை எமக்கு இல்லை எனவும் குறிப்பிட்டார். (அ)

## மகிழ்ச்சியான...

டென்மார்க், ஐஸ்லாந்து, சுவீடன், இஸ்ரேல், நெதர்லாந்து, நோர்வே, லக்சம்பேர்க், சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா தொடர்ச்சியாக முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளன.

இதேநேரம், இந்தியா 126ஆவது இடத்தையும் சீனா 60, பாகிஸ்தான் 108, நேபாளம் 93, பங்களாதேஷ் 129ஆவது இடங்களை பிடித்துள்ளன. கடைசி இடமான 137ஆவது இடத்தை ஆப்கானிஸ்தான் பெற்றுள்ளது.

உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலை வருடாந்தம் ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சிக்கான தீர்வுகள் நிறுவனம் வெளியிட்டு வருகிறது. தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி, சமூக ஆதரவு, ஆரோக்கியமான ஆயுள் காலம், வாழ்க்கையைத் தேர்வு செய்யும் சுதந்திரம், பெருந்தன்மை, அநீதிகள் மற்றும் ஊழல் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பட்டியல் வெளியிடப்படுகிறது. 2023ஆம் ஆண்டுக்கான அறிக்கை நேற்று வெளியானது. (ஐ)

## அரசுக்கு...

இந்தப் போராட்டத்தை கொழும்பு - கோட்டையில் மக்கள் போராட்ட இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது. போராட்டம் ஆரம்பமான சிறிது நேரத்திலேயே அங்கு குவிக்கப்பட்டிருந்த பொலிஸார் அங்கு கூடியவர்களை கலையுமாறு எச்சரித்தனர்.

தொடர்ந்து, கண்ணீர் புகைக் குண்டுகள் வீசப்பட்டன. தண்ணீர் தாரைப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது பொலிஸாரை நோக்கி கற்களை வீசினர். இதைத் தொடர்ந்து, 33 பேரை பொலிஸார் கைது செய்தனர். இதில், 3 பெண்களும் 2 பிக்குகளும் அடங்குவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, ஆர்ப்பாட்டக்காரர்களுடன் ஏற்பட்ட மோதலில் 5 பொலிஸார் காயமடைந்தனர் என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்தது. (ஐ)

# யாழ். பல்கலையில் இன்று சர்வதேச இந்து மாநாடு!

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் இரண்டாவது சர்வதேச இந்து மாநாடு இன்று வியாழக்கிழமை பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் இந்தச சர்வதேச மாநாட்டுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த மாநாட்டில் 54 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. அத்துடன், இந்து கற்கைகள் பீட சபையின் ஏகோபித்த ஆதரவுடன் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் பிரதம குருவாக இருந்து தேகாந்த நிலையை அடைந்த அமரர் கு. நகுலேஸ்வர குருக்களுக்கு "மெய்ப்பொருள்" விருதும், சைவ சமூக பணியாற்றும் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனுக்கு "ஞான வாய்ச்சியன்" விருதும், இலங்கையில் இந்து பண்பாட்டுக்கு உழைக்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு "சிவ நிதி" விருதும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டில் இந்த ஆய்வு மாநாடு நடைபெறவுள்ளமை விசேட அம்சமாகும். (ஐ)

# பாராளுமன்ற மரபுகளை சபாநாயகர் மீறியுள்ளார்

## ரவூப் ஹக்கீம் சாடல்



கொழும்பு, மார்ச் 21

நிறைவேற்றுத்துறையின் தேவைக்காக செயல்படாமல் பாராளுமன்ற மரபுகளை பாதுகாப்பதே சபாநாயகரின் பொறுப்பு. அதனை அவர் செய்ய தவறியுள்ளார். அதனாலேயே சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவர தீர்மானித்தோம். சபாநாயகர் தவறு செய்யும்போது அதனை சுட்டிக்காட்டி சரி செய்ய வேண்டிய பொறுப்பு அதிகாரிகளுக்கு இருக்கிறது. அதனை செய்ய அதி காரிகளும் தவறியுள்ளனர் என ரவூப் ஹக்கீம் எம். பி. தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை இரண்டாது நாளாக இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இந்த பாராளுமன்ற காலத்தில் பல்வேறு விடயங்களை எங்களுக்கு காணக்கூடியதாக இருந்தன. தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி பதவி விலகினார். அதன் பின்னர் அமைச்சரவை பதவி விலகியது. அதனைத் தொடர்ந்து பதில் ஜனாதிபதி ஒருவர் பாராளுமன்றம் மூலம் தெரிவு செய்யப்பட்டமை, தற்போது சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவந்திருக்கிறது.

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை நாங்கள் உடனடியாக கொண்டுவந்தது அல்ல. பல சந்தர்ப்பங்களில் அவர் சபையின் பொறுப்பை பாதுகாக்கத் தவறி வந்துள்ளார்.

குறிப்பாக நிகழ்நிலை காப்புச் சட்டத்தை சபையில் அனுமதிக்கும் போது, அது தொடர்பாக இருந்த குறைபாடுகளை நாங்கள் சுட்டிக்காடியிருந்தபோதும் சபாநாயகர் அதனை கண்டுகொள்ளாமல் செயற்பட்டார்.

நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் 44 திருத்தங்கள் காணப்பட்டன, அதில் 31 வாசகங்களுக்கு உயர் நீதிமன்றம் திருத்தம் மேற்கொண்டிருந்தது. அந்த திருத்தங்கள் முறையாக மேற்கொள்ளாமலே குறித்த சட்டத்தை பாராளுமன்றத்தில் அனுமதிக்க சபாநாயகர் நடவடிக்கை எடுத்தார்.

சபாநாயகரின் இந்த நடவடிக்கைக்கு பாராளுமன்ற அதிகாரிகளும் பொறுப்பாகும். சபாநாயகர் தவறு செய்யும் போது அதனை சுட்டிக்காட்டி திருத்துவது அதிகாரிகளின் பொறுப்பாகும். அதனை அவர்கள் செய்ய தவறி இருக்கின்றனர் - என்றார். (ஐ)

## இளம்...

கொல்லப்பட்டவரின் மனைவி 5ஆவது சந்தேகநபரை அடையாளம் காட்டினார்.

இதைத் தொடர்ந்து வழக்கை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிவான், கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட ஆறு சந்தேகநபர்களையும் அன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார்.

முன்னதாக, கடந்த 11ஆம் திகதி இரவு பொன்னாலை கடற்படை முகாம் அருகே மோட்டார் சைக்கிளில் மனைவியுடன் வந்த இளம் குடும்பஸ்தரான த. பவித்திரன் (வயது 23) என்பவர் கும்பல் ஒன்றால் கடத்தப்பட்டார். இந்தக் கடத்தலுக்கு கடற்படையும் உதவியதாகக் கூறப்படுகின்றது. மனைவியும் குடும்பஸ்தரும் தனித்தனி கார்களில் கடத்தப்பட்டனர்.

மனைவியை சித்தங்கேணி சந்தியில் இறக்கிவிடப்பட்ட நிலையில், இளம் குடும்பஸ்தர் படுகாயங்களுடன் வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் மரத்தின்கீழ் தூக்கி வீசப்பட்டார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரிட்டனில்...

அமைச்சர்கள் கூறுகின்றனர். இதற் காக வருடாந்தம் 300 கோடி ஸ்ரேலிங் பவுண்ஸ் - நம் நாட்டு மதிப்பில் சுமார் ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 997 கோடி ரூபாய் செலவிடப்படுகின்றது என்று கூறப்படுகின்றது.

## நாணயங்களை...

மற்றும் பரிசுப் பொருட்களை தயாரிக்க நாணயக் குற்றிகள் மற்றும் நாணயத் தாள்கள் பயன்படுத்தப்படுவது தொடர்பில் சமூக ஊடகங்களில் வெளியான காணொலிகளை அவதானித்ததன் அடிப்படையிலேயே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அத்துடன், நாணயக் குற்றிகள், நாணயத்தாளை சேதமாக்குவது தண்டனைக்குரிய குற்றம் என்ற எச்சரிக்கையையும் நினைவூட்டியுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu



# இந்திய தூதரகம் முன்பாக சென்றவர்களால் பரபரப்பு

## பொலிஸார் குவிப்பு பாதுகாப்பு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடும் மீனவர்களுக்கு ஆதரவாக போராட வந்தவர்கள் யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரம் முன் சென்றதால் நேற்றுக் காலை சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட கிராமிய கடற்தொழில் அமைப்புக்களின் சம்மேளனமும், யாழ்ப்பாண மாவட்ட கடற் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சம் மேளனமும் இணைந்து நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை காலை முதல் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தன.

உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக வருகை தந்த மாதகல் மீனவர்கள், போராட்டத்தில் ஈடுபட்ட மீன வர்களுடன் இணைந்து பேரணியாக யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரகத்தின் முன்பாக சென்று கவன யீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன் காரணமாக மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட நிலையில், போராட்டக்காரர்கள் அவ் இடத்தைவிட்டு அகன்று மீண்டும் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணை தூதரகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# கனடா புறப்பட்டார் அநுர!

கொழும்பு, மார்ச் 21

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க நேற்று மாலை கனடாவுக்கு புறப்பட்டார். கனடா வாழ் இலங்கையர்களுடனான சில சந்திப்புகளில் பங்கேற்பதற்காகவே அவர் செல்கிறார்.

தேசிய மக்கள் சக்தியின் கனேடிய குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரதானமான இரு மக்கள் சந்திப்புக்களின் முதலாவது சந்திப்பு எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கனடாவின் ரொரண்டோ நகரிலும், இரண்டாவது சந்திப்பு 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வன்கூவர் நகரிலும் இடம்பெறவுள்ளது.

இந்தப் பிரதான மக்கள் சந்திப்புகளுக்கு மேலதிகமாக கனடாவில் வாழும் இலங்கைத் தமிழர் மற்றும் முஸ்லிம் மக்களுடன் சகோதரத்துவ சந்திப்புகளிலும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க பங்கேற்பார். (அ)

# அநுரகுமாரவும் விலகினார்

கொழும்பு, மார்ச் 21

கோப் எனப்படும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிலிருந்து விலகுவதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரான அநுர குமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் வசந்த யாப்பா பண்டார மற்றும் துமிந்த திசாநாயக்க ஆகியோர் நேற்று குறித்த குழுவில் இருந்து விலகிய நிலையில் அநுரகுமார திஸாநாயக்கவும் விலகுவதாக அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிலிருந்து இதுவரை 10 பேர் விலகியுள்ளனர். (அ)

# சரியான முடிவு வரும்வரை உண்ணாவிரதம் தொடரும்!

## யாழ். மாவட்ட மீனவர்கள் அறிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 21

**இந்திய மீனவர்களின் அத்துமீறலை எதிர்த்து யாழ். மீனவர்கள் ஆரம்பித்துள்ள உண்ணா விரதப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.**

**சரியான தீர்வு கிடைக்கும் வரை உண்ணா விரதப் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என அவர்கள் கூறியுள்ளனர்.**

யாழ்ப்பாணம் மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனம், யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் ஆகியவை இணைந்து யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரிக்கு முன்பாக இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

மீனவர்களுக்கு பிரச்னைக்கு பொறுப்பேற்கவேண்டிய அதிகாரி, போராட்ட களத்துக்கு வந்து தமது பிரச்னைக்கு தீர்வு காண்பதாக உறுதியளிக்கும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடப் போவதில்லை எனப் போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கும் யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத்தின் செயலாளர் செபமாலை அன்டன் செபராசா வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறுகையில்-

சரியான முடிவு வரும் வரை நிச்சயமாக சாகும் வரை உண்ணா விரதம் இருந்தே தீருவோம். எங்களுக்கு சரியான ஒரு தீர்வு வேண்டும். யாராகவும் இருக்கலாம். எங்களது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இங்கே வந்து சந்திக்க விரும்பினால் சந்திக்கலாம். ஆனால், அவர்கள் எங்களுக்காக எந்தவொரு இடத்திலும் குரல் கொடுத்ததாக தெரியவில்லை. கடற்றொழில் அமைச்சராக இருந்தாலும் சரி, ஜனாதிபதியாக இருந்தாலும் சரி அல்லது இந்த நாட்டின் யாரோ ஒரு பொறுப்பான தலைவராக இருந்தாலும் சரி வந்து எங்களுக்கு சரியான உறுதிமொழி வழங்கும் வரை இந்த இடத்திலிருந்து எழும்பமாட்டோம் என்பதை உறுதியாக கூறிக்கொள்கின்றோம்-என்றார். (அ)

# மொட்டுக் கட்சி உறுப்பினரும் கோப் குழுவிலிருந்து விலகல்!

கொழும்பு, மார்ச் 21

கோப் குழுவில் இருந்து பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் வசந்த யாப்பா பண்டாரவும் நேற்று விலகுவதாக பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்றம் நேற்று காலை கூடியது.

இதன்போது பிரதிச் சபாநாயகர், பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரான வசந்த யாப்பா பண்டார கோப் கோப் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளதாக சபையில் அறிவித்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்த வசந்த யாப்பா பண்டார, தான் கோப் குழுவின் உறுப்பினர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்தல் விடுத்தார்.

இது தொடர்பாக பாராளுமன்றில் உரையாற்றிய வசந்த யாப்பா பண்டார, சுனில் ஹந்துன்னெத்தி காலத்தில் இருந்தே கோப் குழுவின் தலைவராக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரே நியமிக்கப்படுவார் என் றும் ஆனால், தற்போது குழப்பமான சூழ்நிலை நிலவுவதால் கோப் குழுவில் இருந்து தான் விலகுவதாகவும் அறிவித்தார்.

அத்துடன், விரைவில் பதவி விலகல் தொடர்பாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கோப் குழுவில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, எஸ்.எம்.மரிக்கார், சரித ஹேரத், சாணக்கியன், ஹேஷா விதானகே மற்றும் காமினி வலேபொட உள்ளிட்ட 6 உறுப்பினர்கள் நேற்று முன் தினம் பதவி விலகி இருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்னவும் கோப் குழு உறுப்புரிமையிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்.

கோப் குழுவின் புதிய தலைவராக மொட்டுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இவர்கள் இவ்வாறு பதவி விலகியுள்ளனர். (அ)

# கோப் தலைவரை நீக்காவிட்டால் உண்ணாவிரதத்தில் ஈடுபடுவோம்!

## நளின் பண்டார சபையில் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 21

கோப் தலைவரை நீக்காவிட்டால் உண்ணாவிரதத்தில் ஈடுபட நேரிடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

கோப் தலைவரை நீக்குவது குறித்து உடனடியாக அறிக்கை வெளியிடவேண்டும் எனக் கூறிய நளின் பண்டார, அவ்வாறு செய்யாவிட்டால் உண்ணாவிரதமிருக்க நேரிடும் என தெரிவித்தார். (அ)

# வெளிநாட்டில் இருக்கும் ஆளும் கட்சி எம்.பிக்களை உடன் திரும்ப உத்தரவு!

கொழும்பு, மார்ச் 21

வெளிநாட்டில் இருக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்களை உடனடியாக நாடு திரும்புமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் அனைவரும் இன்று வியாழக்கிழமை காலைக்குள் நாட்டுக்குள் வரவேண்டும் என ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவித்துள்ளார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக முன் வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ளமையாலேயே கட்சி இந்த முடிவெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் பந்துல குணவர்தன, அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, பவித்ரா வன்னியாராச்சி பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் 6 பேர் இதில் அடங்குகின்றனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வனிந்து ஹசரங்கவுக்கு மீண்டும் போட்டி தடை!



டாக்கா, மார்ச் 21

இலங்கையின் சுழல்பந்துவீச்சாளர் வனிந்து ஹசரங்கவுக்கு 2 போட்டிகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐ. சி. சி. ஒழுக்கக் கோவைக்கான 2ஆம் நிலை மீறல்களில் வனிந்து ஹசரங்க ஈடுபட்டமையால் அவருக்கான தகுதி நீக்கப் புள்ளிகள் 24 மாத காலப்பகுதியில் 8ஆக உயர்ந்ததை அடுத்து இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

2ஆம் நிலை மீறல்களுக்காக அவருக்கு 3 தகுதி நீக்கப் புள்ளிகள் வழங்கப்பட்டதுடன், போட்டிக் கட்டணத்தில் 50 வீத அபாரதமும் விதிக்கப்பட்டது.

சட்டோக்ராமில் நடைபெற்ற பங்களாதேஷூக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் ஐ. சி. சி. ஒழுக்கக் கோவையின் 2.9ஆவது பரிந்துரையை மீறிய மைக்காக ஹசரங்க குற்றவாளியாகக் காணப்பட்டார்.

ஆப்கானுக்கு எதிரான இருபது - 20 போட்டியிலும் நடுவரின் முடிவை விமர்சித்ததால் ஹசரங்கவுக்கு இரு போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷூக்கு எதிரான போட்டியின் 37ஆவது ஓவர் முடிவில் மத்தியஸ்தரிடமிருந்து தனது தொப்பியைப் பறித்தெடுத்த வனிந்து ஹசரங்க போட்டியில் மத்தியஸ்தம் செய்ததை கேலி செய்தார். இதனாலேயே, அவருக்கு போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதே போட்டியில் ஐசிசி ஒழுக்கக்கோவையின் 2.13ஆவது பரிந்துரையை மிறியமைக்காக இலங்கை அணித் தலைவர் குசல் மெண்டிஸூக்கு போட்டிக் கட்டணத்தில் 50 வீத அபராதம் விதிக்கப்பட்டதுடன் 3 தகுதிநீக்கப் புள்ளிகளும் வழங்கப்பட்டது. 24 மாத காலப்பகுதியில் குசல் மெண்டிஸின் முதலாவது மீறல் செயல் இதுவாகும். (ஐ)

# ஆர். சி. பியின் பெயர் மாறியது

பெங்களூரு, மார்ச் 16

ஆர். சி. பி. என்று அழைக்கப்படும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி தனது பெயரை மாற்றிக் கொண்டுள்ளது.

கடந்த 16 வருடங்களாக "றேயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்" என்ற பெயரில் விளையாடி வந்த பெங்களூர் அணி இந்த முறை "றோயல் சலஞ்சர்ஸ் பெங்களுரு" எனத் தனதுபெயரை மாற்றியுள்ளது. கடந்த 2014ஆம் ஆண்டு கர்நாடகா மாநில தலைநக ரான பெங்களூரின் பெயர் "பெங்களூரு" என மாற்றப்பட்டது. அப்போதிருந்தே ஐ. பி. எல். அணியின் பெயரையும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு என மாற்ற வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

இந்த நிலையில், தெனது பெயரை மாற்றம் செய்தது பெங்களூரு அணி. இந்த பெயர் மாற்ற நிகழ்வில் பெண்கள் ஐ. பி. எல்லில் சம்பியன் பட்டம் வென்ற அணித் தலைவி ஸ்மிருதி மந்தனா, றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் தலைவர் பப் டு பிளசிஸ், விராட் கோலி ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# டில்லி அணியின் தலைவராக ரிஷப் அறிவிக்கப்பட்டார்!




புதுடில்லி, மார்ச் 21

ஐ. பி. எல். தொடர் நாளை தொடங்குகிறது. இந்த நிலையில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் தலைவராக ரிஷப் பந்த் அறிவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2022ஆம் ஆண்டு நடந்த விபத்தைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ஐ. பி. எல். தொடரில் ரிஷப் பந்த் விளையாடவில்லை.

இதன் காரணமாக டேவிட் வோர்ணர் டில்லி கப்பிடல்ஸ் அணியின் தலைவராக செயல்பட்டிருந்தார். இந்த ஆண்டும் அவரே அணித் தலைவராகத் தொடர்வார் என்றே பலரும் கருதினர்.

ஆனால் காயத்தில் இருந்து குணமடைந்த ரிஷப் பந்த் மீண்டும் அணிக்கு திரும்பிய நிலையில், அணியின் தலைவர் யார் என்ற கேள்வி எழுந்தது.

இந்நிலையில் இந்த கேள்விகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக டில்லி அணி நிர்வாகம், ரிஷப் பந்தை அணியின் தலைவராக அறிவித்துள்ளது. (ஐ)



# ஐ. பி. எல். கிண்ணத்தை இம்முறை வெல்வோம்!

பெங்களூரு, மார்ச் 21

ஐ. பி. எல். கிண்ணத்தை வெல்வோம் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் விராட் கோலி.

நடந்து முடிந்த பெண்கள் பிறீமியர் லீக்கில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணி முதன் முறையாக கோப்பையை கைப்பற்றியது. இதனை தொடர்ந்து ஆண்கள் பங்கேற்கும் ஐ. பி. எல். தொடர் நாளை தொடங்குகிறது.

இந்த நிலையில், பெங்களூருவில் நடந்த நிகழ்ச்சியில் நட்சத்திர வீரர் விராட் கோலி பேசுகையில், "பெண்கள் பிறீமியர் லீக் கிரிக்கெட்டில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு வெற்றி பெற்றதை பார்த்தோம். அந்த கிண்ணத்தை இரட்டிப்பாக்க முடியும் என்று நம்புகிறேன். அதை செய்தால் உண்மையிலேயே சிறப்பு வாய்ந்ததாக இருக்கும்.

ஐ.பி.எல். கிண்ணத்தை வென்று, அதை உணர்வுபூர்வமாக அனுபவிக்க வேண்டும் என்பது எனது கனவு. இங்குள்ள அந்த அணி (பெங்களூரு) முதன்முறையாக கோப்பையை வெல்லும் என்ற நம்பிக்கை இருக்கிறது. களத்தில் எனது முழு திறமையை வெளிப்படுத்த முயற்சிப்பேன்" - என்றார்.

# ஐ. பி. எல். தொடக்க விழாவில் ஏ. ஆர். ரஹ்மான் பங்கேற்பார்

சென்னை, மார்ச் 21

ஐ. பி. எல். தொடக்க விழாவில் ஏ. ஆர். ரஹ்மான், அக்ஷய் குமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

17ஆவது ஐ. பி. எல். தொடர் சென்னையில் நாளை இரவு 8 மணிக்கு தொடங்குகிறது. ஆரம்பப் போட்டியில் நடப்பு சம்பியன் சென்னை சுப்பர் கிங்கும் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியும் பலப் பரீட்சை நடத்துகின்றன.

இதையொட்டி கண்கவர் கலைநிகழ்ச்சியுடன் பிரமாண்டமான தொடக்க விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாலை 6.30 மணி முதல் 7.30 வரை நடக்கும் தொடக்க விழாவில் பிரபல இசையமைப்பாளர் ஏ. ஆர். ரஹ்மானின் இசையுடன் கலைஞர்களின் நடனம் இடம்பெறுகிறது.

ஹிந்தி பாடகர் சோனு நிகாம், ஹிந்தி நடிகர்கள் அக்ஷய் குமார், டைகர் ஷெராப் ரசிகர்களை குதூகலப்படுத்த வருகிறார்கள். இதனால் தொடக்க விழாவுக்கு ரசிகர்கள் மத்தியில் இப்போதே எதிர்பார்ப்பு எகிறியுள்ளது. (ஐ)



# சர்வதேச மகிழ்ச்சி தினம்:
# பிறருக்குத் தீங்கு விளையக்கூடாது என்ற எச்சரிக்கையுடன் செய்யும் செயல்களே மகிழ்ச்சியை அளிக்கும்!

ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 20ஆம் தேதி சர்வதேச மகிழ்ச்சி தினம் கொண்டாடப்படுகிறது.

ஏன் மார்ச் 20 ஆம் தேதியில் சர்வதேச மகிழ்ச்சி தினத்தை சிறப்பிக்க வேண்டும் என நீங்கள் கேட்கலாம். அந்த நாளுக்கென ஒரு சிறப்பு உண்டு. அது இளவேனிற் காலத்தின், அதாவது, வசந்த காலத்தின் துவக்க நாள். அந்த நாளில் பகலும் இரவும் சரிசமாக இருக்கும். இதனால்தான் இந்த நாளை, உலகின் மகிழ்ச்சி தினமாகச் சிறப்பிக்க தேர்ந்தெடுத்திருக்கிறது ஐ.நா. நிறுவனம்.




மகிழ்ச்சியாக வாழ்வது, மனித உரிமைகளில் ஒன்று. இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தில், ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பொது அவை, 2012ஆம் ஆண்டு ஜூலை மாதம், உலக மகிழ்ச்சி நாளை உருவாக்கியது. அந்த அவையின் அறிவிப்பின்படி, ஒவ்வோர் ஆண்டும், மார்ச் 20ஆம் தேதி, ஒவ்வொரு தலைப்பில், சர்வதேச மகிழ்ச்சி நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது. 'ஒன்றிணைந்து மகிழ்ச்சி காணல்' என்பது இவ்வாண்டிற்கான தலைப்பாக எடுக்கப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டிற்கான இந்த தலைப்பு, நீடித்த நிலையான மகிழ்ச்சி என்பது சமூகத்தில் நம் உறவுகளிலிருந்தும் ஈடுபாட்டிலிருந்தும் பிறக்கிறது என்பதை வலியுறுத்திக் கூறுகிறது.




### மகிழ்ச்சி என்பது என்ன?

மகிழ்ச்சி எது எனக் கேட்டால் ஒவ்வொரு மனிதரும் ஒவ்வோர் அர்த்தத்தைக் கூறுவர். போர் மற்றும் வறுமையை உலகளவில் முடிவுக்குக் கொண்டுவருவதே மகிழ்ச்சி என ஐ.நா. நிறுவனம் கருதுகிறது. மகிழ்ச்சியே மனிதனின் அடிப்படை இலட்சியம் என்கிற அடிப்படையில் ஐ.நா. பொதுஅவை மார்ச் 20ஆம் தேதியை அனைத்துலக மகிழ்ச்சி தினமாக அறிவித்துள்ளது.

மகிழ்ச்சி என்பது ஓர் உணர்ச்சி, அதனை யாராலும் விலை கொடுத்து வாங்க முடியாது. நமது ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியை நோக்கித்தான் இருக்கிறது. மகிழ்ச்சி எல்லாவித மாற்றங்களையும் கொண்டு வரக் கூடியதாகும். எப்போதும் வாழ்வில் மகிழ்ச்சியாக இருப்பது நமது ஆயுளை கூட்டும் என்பது நாம் அறிந்ததே.

மகிழ்ச்சியைப் பெறும் நோக்கத்துடன் செய்யும் எல்லா செயல்களும் மகிழ்ச்சியைத் தந்துவிடாது. பிறருக்குத் தீங்கு விளையக்கூடாது என்ற எச்சரிக்கையுடன் செய்யும் செயல்களே மகிழ்ச்சியை அளிக்கும். அப்படி தீங்கற்ற செயல்களால் தன்னை உருவாக்கிக் கொள்பவர்கள் வாழ்வில் வெற்றிகாண்பர்.

பொதுவாகவே மகிழ்ச்சிக்கும், சிரிப்பிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. மகிழ்ச்சியின் அடிப்படையாக உணரப்படுவது சிரிப்பு. எனவே சிரிப்பதன் மூலம் மகிழ்ச்சியைத் தூண்ட முடியும். சிரிப்பு ஆரோக்கியம் தருவதாக, தற்போதைய மருத்துவ கண்டுபிடிப்புகள் கூறுகின்றன. மனநிலையை மகிழ்ச்சியாக பராமரிப்பதன் வழியாக, சிரிப்பையும், ஆரோக்கியத்தையும் வாழ்வில் தக்க வைக்க முடியும். நம்மால் முடித்த அளவு பிறருக்கு உதவி செய்வதன் வழியாக மகிழ்ச்சியை பெறவும் முடியும், பிறருக்கு தரவும் முடியும்.

மகிழ்ச்சி, மனிதராக பிறந்த அனைவருக்கும் பொதுவான ஓர் உணர்வு. ஒரு மனிதனின் மகிழ்ச்சி என்பது அவரை மட்டுமல்ல, அவரைச் சுற்றி உள்ளவர்களின் மனநிலையையும் மாற்றி வாழ்க்கையை இனிமையாக்கும்.

புகார் சொல்லும் பழக்கத்தைத் தவிர்த்து, வாழ்க்கையில் நன்றியுணர்வோடு இருப்பவர்கள், மன அமைதியோடு, மகிழ்ச்சியாக இருக்கின்றனர். நாம் சரியானதொரு வாழ்க்கையை வாழ்கிறோம் என்பதை நிரூபிப்பது, அந்த வாழ்க்கை வெளிப்படுத்தும் மகிழ்ச்சியில் அடங்கியுள்ளது.

### மகிழ்ச்சி தினத்தின் துவக்கம்

2012 ஏப்ரலில் பூட்டானின் மன்னராட்சி அரசு, உலகெங்கிலும் உள்ள பிரதிநிதிகளின் கூட்டத்தைக் கூட்டியது. அதில் மக்களின் மகிழ்ச்சி மற்றும் நல்வாழ்வை ஒரு பொருளாதார அம்சம் போலப் பார்க்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு இந்த நாள் முதன்முதலில் ஐக்கிய நாடுகள் சபையால் தொடங்கப்பட்டது. தேசத்தில் மகிழ்ச்சியின் முக்கியத்துவத்தை நம்பிய பூட்டானால் முதலில் வலியுறுத்தப்பட்ட ஒரு முன்முயற்சியாகும் இது. முதல் அனைத்துலக மகிழ்ச்சி தினம் 2013ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் நாள் கொண்டாடப்பட்டது.

### மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியல்

சமூகப் பாதுகாப்பு, வருமானம், நல ஆதரவு, சுதந்திரம், தாராள மனப்பான்மை, ஊழல் இல்லாமை உள்ளிட்டவற்றை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட மகிழ்ச்சிப் பட்டியலில் தொடர்ந்து ஆறாவது ஆண்டாகப் பின்லாந்து முதல் இடத்தை பிடித்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் மக்களின் சராசரி வாழ்க்கை மதிப்பீடுகள் கருத்தில் கொண்டு இந்தப் பட்டியலை உருவாக்கியுள்ளனர். கடந்த காலங்களைப் போல நார்டிக் நாடுகளே முதல் இடங்களில் உள்ளன. இதில் பின்லாந்து முதல் இடத்தில் உள்ள நிலையில், டென்மார்க் இரண்டாவது இடத்திலும், ஐஸ்லாந்து மூன்றாவது இடத்திலும், இஸ்ரேல் நான்காவது இடத்திலும், நெதர்லாந்து 5வது இடத்திலும், சுவீடன் 6வது இடத்திலும் உள்ளன. அதே போல நோர்வே, சுவிட்சர்லாந்து, லக்சம்பர்க், நியூசிலாந்து ஆகிய நாடுகள் 7 முதல் 10வது இடங்களில் உள்ளன. இங்கு இந்தியா எந்த இடத்தில் வருகிறது என அறிவதற்கு நமக்குள் ஆர்வம் எழலாம். அண்டை நாடுகளான நேபாளம் (78ஆவது இடம்), சீனா (64ஆவது இடம்), வங்கதேசம் (118ஆவது இடம்), இலங்கை (112ஆவது இடம்), பாகிஸ்தான் (108வது இடம்) ஆகியவைகளின் பட்டியல் வரிசையை பார்க்கும்போது, நிச்சயமாக இந்தியா இதற்கெல்லாம் மேலாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கைத் துளிர்விடுகின்றது. ஆனால் 136 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில் இந்தியா 126வது இடத்தில் உள்ளது. அதாவது உலகிலேயே மிகக் குறைவான மகிழ்ச்சியான நாடுகளில் ஒன்றாக இந்தியா இருக்கிறது. மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் கடைசி 10 இடங்களை எடுத்துக் கொண்டால் அதில் ஆப்கானிஸ்தான் கடைசி இடமான 136வது இடத்தில் உள்ளது. இதுமட்டுமின்றி 2022ம் ஆண்டும், 2021ம் ஆண்டும் கடைசி இடத்தை ஆப்கானிஸ்தான் தான் பெற்றது. கடந்த ஆண்டு போர்களைச் சந்தித்த நாடுகளான இரஷ்யா 70வது இடத்தையும், உக்ரைன் 92வது இடத்தையும் பிடித்துள்ளன. இந்தியாவோ, அவைகளுக்கும் வெகு கீழாக உள்ளது.

மகிழ்ச்சியின் பட்டியல் எப்படி தயாரிக்கப்படுகிறது

ஒவ்வொரு நாட்டிலிருந்தும் ஒன்று முதல் மூவாயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அது அதன் மாதிரி அளவு ஆகும். இவர்களிடம் சில கேள்விகள் கேட்கப்படுகின்றன. இந்த கேள்விகளுக்கான பதில்களின் அடிப்படையில், பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

தொழிலைப் போலவே, மதத்தைப் பின்பற்றும் சுதந்திரம், விருப்பமான உணவை உண்ணும் சுதந்திரம், விருப்பமான ஆடைகளைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் போன்றவை தவிர, கடந்த ஒரு மாதத்தில் ஏதாவது தொண்டு நிறுவனத்திற்கு பணம் கொடுத்தீர்களா என்ற கேள்வியும் கேட்கப்படுகிறது. வாழ்க்கையில் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்கும் ஒருவர் மற்றவர்களுக்கு உதவவும், தானம் செய்யவும் முன்வருவார் என்று நம்பப்படுகிறது. ஊழல் தொடர்பான கேள்வியும் இருக்கும். ஏனெனில், நாட்டில் ஊழல் இல்லாதது செழிப்பைக் குறிக்கிறது என்று நம்பப்படுகிறது. இது போன்ற பல கேள்விகளை கேட்டு, இந்த ஆய்வில் இருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த அறிக்கையில் தரவரிசை தீர்மானிக்கப்படுகிறது.

### மகிழ்ச்சிக்கான வழிகள்

வீட்டுக்குள் முடங்கிக் கிடப்பதை விட வெளியே செல்வதால் சுற்றுச் சூழலில் இயல்பாகவே உள்ள இதமான காற்று, சந்தோசமாக இருக்கும் நபர்களின் சந்திப்பு என பல நல்ல விடயங்கள் நமக்கு கிடைக்கும்.

உடற்பயிற்சி மேற்கொள்வது, அந்த நாள் முழுதும் சக்தியும், உற்சாகமும் மிக்க நபராகச் செயற்படவும் நேர்மறையாக சிந்திக்கவும் உதவும்.

தேவைக்கு ஏற்ற உறக்கம் முக்கியம். நம்மில் பலர் அதிகமாக வேலை செய்து குறைவான நேரமே தூங்குவ தால் அவர்களுக்கு அதிகபட்ச அழுத்தமும், எதிர்மறை சிந்தனையும் ஏற்படுவதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

மனதை இலகுவாக வைத்துக் கொள்ளுங்கள். எதுவும் பாதிக்க விடாதீர்கள். மோசமான அனுபவங்களை மனதில் இருந்து விலக்கி வையுங்கள்.

மனதை திசை திருப்பும் பயிற்சிகளால் மகிழ்ச்சியை மனதிற்குள் கொண்டு வரப் பழகுங்கள். பிரச்னைகளை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளப் பயிற்சி எடுங்கள்.

கோபம் மனிதனுக்கு எதிரி. தைரியம் இல்லாதவர், தாழ்வு மனப்பான்மை கொண்டவர், தவறுகள் செய்பவர், மனோதிடம் அற்றவர்தான் தங்கள் குறைகளை மறைத்து தங்களை காத்துக் கொள்ளவே கோபம் என்ற ஆயுதத்தை கையில் எடுப்பார்கள். ஆகவே கோபத்திலிருந்து விடுதலைப் பெறுங்கள். அன்பு, பாசம், நட்பு இவைகளுக்கு மட்டுமே தலை வணங்குங்கள்.

உங்கள் மனசாட்சி சொல்படி கேளுங்கள் மனசாட்சிக்கு பயந்து நடக்கக் கற்றுக் கொள்ளுங்கள். பேசும்போது அடுத்தவர் கண்களைப் பார்த்து பேச கற்றுக் கொள்ளுங்கள்.

தயவுசெய்து அலைபேசியை தேவையான விஷயத்துக்கு மட்டும் உபயோகியுங்கள்.

செலவைவிட சேமிப்பை அதிகமாக்குங்கள். நீங்கள் சந்திக்கும் நபர்களை எப்போதும் சிரித்த முகத்துடன் அணுகுங்கள். சின்ன புன்னகை எல்லாவற்றையும் மாற்றும். யார் என தெரியாத நபராக இருந்தாலும் கனிவுடன் உதவுங்கள். சின்ன உதவி கூட மகிழ்ச்சியை உருவாக்கும்.

வாழ்வின் போக்கிலேயே வரும் மகிழ்ச்சியை விடாமல் பிடித்தால் அது உன்னதமே.

குழந்தைகளைப் பாருங்கள். எந்தக் கவலையும் இன்றி மகிழ்வுடன் அவர்கள் உலகத்தில் விளையாடுவார்கள். நாமும் குழந்தைகளோடு குழந்தையாக விளையாடி குதூகலிக்கும்போது நம்மையறியாமல் நம் மனம் மகிழ்ச்சியில் ஆழ்ந்து புது உற்சாகத்தை தரும். யாராலும் நமக்குள் மகிழ்ச்சியை விதைக்க முடியாது. நாம் மட்டுமே நம் உணர்வுகளுக்கு பொறுப்பாக முடியும்.

மகிழ்ச்சியாக இருப்பது என்பது மனிதனின் அடிப்படை உரிமை. மகிழ்ச்சியாக இருக்கும் மனிதன் அதிக ஆயுளைக் கொண்டுள்ளான் என்கின்றனர் அறிவியலாளர்கள்.

நாம் பிறந்த மண்ணை, நாம் வாழும் நாட்டை மகிழ்ச்சியான நாடாக மாற்றி, மேலும் முன்னோக்கி நகர்த்திச் செல்வதில் அரசுக்கு எந்தளவுக்கு பங்கு இருக்கிறதோ, அதேயளவுக்கு தனிநபர் ஒவ்வொருவருக்கும் உண்டு.

மகிழ்ச்சியோடு வாழவும் பிறரை மகிழ்ச்சிப்படுத்தவும் உறுதியெடுப்போம்.

# பிரான்ஸ் - ரஷ்யா சொற்போர்:

# நேட்டோ படை ரஷ்யா செல்ல மறுப்பு!

## பிரான்ஸ் மக்களும் தரைப் போருக்கு எதிர்ப்பு !

ஐங்கரன்
விக்கினேஸ்வரா

ரஷ்யாவின் யுத்தம் உக்ரேன் மீது தொடங்கிய பின், சமாதான பேச்சு நடாத்த 2022 ஏப்ரலில் மாஸ்கோ சென்ற முதலாவது வெளிநாட்டு தலைவர் பிரான்ஸ் ஜனாதிபதி எம்மானுவல் மக்ரோன் ஆவார்.

ரஷ்யாவுடன் நீண்ட கால நட்பை பேணிய பிரான்ஸ், இப்போது அதி தீவிரமாக எதிர்க்கிறது. உக்ரேனிய போரில், ரஷ்யா தோற்றே ஆக வேண்டும் என பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரான் அண்மையில் சூளுரைத்துள்ளார்.

கடந்த 2022 பெப்ரவரி 24 அன்று தொடங்கிய ரஷ்ய-உக்ரைன் போர் இன்னமும் தொடர்கிறது. இவ்வேளையில் பிரான்ஸ் - ரஷ்யா இடையே காரசாரமான வார்த்தைப் போர் தொடர்கிறது.

**முனிச் பாதுகாப்பு மாநாடு:**

ஜெர்மனியின் முனிச்சில் கடந்த மாதம் பெப்ரவரி 16-18இல் முன்னெடுக்கப்பட்ட பாதுகாப்பு மாநாட்டில் **(Munich Security Conference (MSC)** 2024 ) கலந்துகொண்ட பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் மற்றும் அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் ஆகியோரும் உக்ரைனுக்கு ஆதரவாக தங்கள்




**ரஷ்யாவின் தோல்வி அவசியம்:**

ஆயினும் உக்ரைனுக்கு உதவி வந்த அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் நிதியுதவி உக்ரைனுக்கு தொடர்ந்து கிடைப்பதில் பல்வேறு காரணங்களால் சிக்கல் நிலவுகிறது. இரு வருடங்களைக் கடந்து போர் தீவிரமடைந்துள்ள நிலையில், உக்ரைனிடம் போதுமான அளவு இராணுவ தளவாடங்கள் இல்லாததால், தங்கள் நாட்டில் ரஷ்ய இராணுவம் முன்னேறி, பிராந்தியங்களை கைப்பற்றுவதை தடுப்பது கடினமாக உள்ளது என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர்

***ரஷ்யாவை எதிர்த்துப் போராட நேட்டோ துருப்புகளை அனுப்புவதற்கான மக்ரோனின் அழைப்புக்கு, பிரெஞ்சு மக்களில் 68 சதவீதத்தினரும் 80 சதவீத ஜேர்மனியர்களும் பாரியளவில் எதிர்ப்பை காட்டியுள்ளனர்.***










நிலைப்பாட்டை குறிப்பிட்டுள்ளனர்.

மாநாட்டில் பங்கேற்ற நாடுகள் பல உக்ரைனுக்கு மேலும் அதிகமாக ஆயுதங்களை வழங்க உறுதி செய்ததுடன், ரஷ்யாவுக்கு எதிராக கடுமையான பொருளாதார தடைகளை கொண்டுவரவும் கோரிக்கை விடுத்தன.

அதேவேளை, ரஷ்யா உக்ரைன் போர் தொடர்பில் பிரான்ஸ் ஜனாதிபதி நேட்டோ நாடுகளை கோழைகளாக இருக்க வேண்டாம் என அண்மையில் வலியுறுத்தி உள்ளார்.

உக்ரைனின் நட்பு நாடுகள் போரில் உக்ரைனுக்கு உதவவேண்டுமென அழைப்பு விடுத்த மக்ரோன், மேற்கத்திய நாடுகளின் வீரர்கள் உக்ரைனுக்கு ஆதரவாக போரிடுவதற்காக உக்ரைன் செல்வதற்கு தனது ஆதரவையும் உறுதி செய்துள்ளார். மேலும் ஐரோப்பாவில் முடக்கப்பட்டுள்ள ரஷ்யர்களின் சொத்துக்களைக் கொண்டு உக்ரைனுக்கு உதவுவதற்கும் தான் ஆதரவு தெரிவிப்பதாகவும் மேக்ரான் தெரிவித்துள்ளார்.

ஜெலன்ஸ்கி தெரிவித்து உலக நாடுகளிடம் உதவி கேட்டு வருகிறார்.

மேற்கத்திய நாடுகளின் இராணுவ உதவிகள் கிடைப்பது தாமதமாவதால், உயிரிழப்புடன் உக்ரைனின் பல பிராந்தியங்களை ரஷ்யாவிடம் இழக்க நேரிடும் என உக்ரைன் இராணுவ அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில், உக்ரைனுக்கு ஆதரவான நாடுகளின் சந்திப்பு, பெப்ரவரியில் பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நடைபெற்றது.

இதில் பேசிய பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மகரோன் ரஷ்யா தோல்வியடைய பிரான்ஸ் திடசங்கற்பம் பூண்டுள்ளது என

தெரிவித்ததார். இப்போரில் ரஷ்யா வெற்றி பெறக் கூடாது. ஐரோப்பிய நாடுகள் பாதுகாப்புடன் நிலையாக இருக்க ரஷ்யா இப்போரில் தோற்க வேண்டியது அவசியம்.

(16ம் பக்கம் பார்க்க)

# பிரான்ஸ் - ரஷ்யா சொற்போர்:...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

**படையை அனுப்ப நேட்டோ எதிர்ப்பு:**

ஆயினும் மக்ரோனின் தரைப்படை அனுப்பும் திட்டத்தை மற்றய நேட்டோ நாடுகள் ஆதரிப்பதாகத் தெரியவில்லை. மேற்கத்திய நாடுகள் நேரடியாக போரில் தலையிடுவதன் மூலம் சிவப்புக் கோட் டைத் தாண்டக்கூடாது என்று ஜேர்மன் பாதுகாப்புத்துறை அமைச்சர் கூறியுள் ளார்.

மக்ரோனின் கருத்துக்கள் பயனளிப் பவையாக இல்லை என்றும், உக்ரை னுக்கு வீரர்களை அனுப்புவது தைரியமா அல்லது கோழைத்தனமா என்பதைக் குறித்து விவாதிக்க அவசியமில்லை என தான் கருதுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், மேற்கத்திய நாடுக ளின் வீரர்கள் உக்ரைனுக்கு ஆதரவாக போரிடுவதற்காக உக்ரைன் சென்றால், அவர்கள் அணு ஆயுதப் போரை எதிர் கொள்ளவேண்டியிருக்கும் என ரஷ்ய ஜனாதிபதி புட்டின் எச்சரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை உக்ரேனில் ரஷ்யாவை எதிர்த்துப் போராட நேட்டோ துருப்பு களை அனுப்புவதற்கான மக்ரோனின் அழைப்புக்கு, பிரெஞ்சு மக்களில் 68 சதவீதத்தினரும் 80 சதவீத ஜேர்மனியர் களும் பாரிய மக்கள் எதிர்ப்பைக் காட்டு கின்றனர்.

**போர் ரஷ்ய மக்களுடன் அல்ல:**

ரஷ்யா வெற்றி பெறாமலிருக்க நாங் கள் அனைத்தையும் செய்வோம். ரஷ்யா வின் ஆக்கிரமிப்பு மனப்பான்மையுட ன்தான் நாங்கள் போரிடுகிறோமே தவிர ரஷ்ய மக்களுடன் அல்ல. குறுகிய தூர மற்றும் தொலைதூர ஏவுகணைகளும், வெடிகுண்டுகளும் உக்ரைனுக்கு விரை வில் வழங்கப்படும். உக்ரைனுக்கு நட்பு நாடுகளின் இராணுவத்தை அனுப்ப வேண்டிய சூழல் வந்தால் அதையும் பரி சீலனை செய்வோம். இவ்வாறு மக்ரோன் கூறினார்.

சில தினங்களுக்கு முன், ரஷ்ய ஜனாதி பதி விளாடிமிர் புட்டின், நேரடியாக மேற் கத்திய நாடுகளின் இராணுவம் உக்ரைன் மண்ணில் இருந்து போரிட தொடங்கி னால் அது ரஷ்யாவிற்கும் நேட்டோ கூட்டணி நாடுகளுக்கும் எதிரான போராக மாறும் என எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கோழைகளாக இருக்க வேண்டாம்!

ரஷ்யா உக்ரைன் போர் தொடர்பில் பிரான்ஸ் ஜனாதிபதி நேட்டோ நாடு களை கோழைகளாக இருக்க வேண்டாம் என அண்மையில் வலியுறுத்தி உள்ளார்.

உக்ரைன் மண்ணில் ரஷ்யா தோல்வி யடைய வேண்டும் எனவும், ஆனால் ரஷ்யாவை சின்னாபின்னமாக்கும் வெற்றி வேண்டாம் எனவும், உக்ரைன் தனது நிலையைப் பாதுகாக்கவும் வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என மக் ரோன் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் ரஷ்யாவை மொத்தமாக சின்னா பின்னமாக்கிவிட்டு வெற்றி கொள் ளும் திட்டத்திற்கு பிரான்ஸ் ஆதரவளிக் காது எனவும் மேக்ரான் குறிப்பிட்டுள் ளார்.

ரஷ்யாவை அதன் மண்ணில் வெற்றி கொள்ள வேண்டும் என சில நாடுகள் குறிப்பிடுவதை தாம் ஏற்கவில்லை எனவும் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா உக்ரைன் போர் தொடர்பில் பேசிய பிரான்ஸ் ஜனாதிபதி, உக்ரைனின் கூட்டாளிகள் கோழைகளாக இருக்கக் கூடாது என்று கூறியுள்ளார். மேக்ரா னின் இந்த கருத்துக்கு சில நேட்டோ உறுப்பு நாடுகள் கடும் விமர்சனம் வைத் துள்ளன.





